3681

T
3681

உ

ஸ்ரீசற்குருவேநம:

ஸ்ரீதாண்டவராயசுவாமிகள்

அருளிச்செய்த

# கைவல்யநவநீதம்.

இஃது

சமிவநக்ஷேத்திரமென்னுங் கோயிலூர்

ஸ்ரீமுத்துராமலிங்கசுவாமிகளினாதீனத்திற்குரிய

ஸ்ரீசிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ-இராமசாமிச்சுவாமிகளால்

பரிசோதித்த பிரதிக்கிணங்க,

இஃது,

ஆ-எதிராஜமுதலியாரவர்களது

சென்னை-சூளை:

"பிரின்ஸ் ஆவ் வேல்ஸ்" அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1904-ஞு.

T003681
Sarasvati Mahal Library. Thanjavur

உ

கணபதிதுணை.

# கைவல்யநவநீதம்.

3681

## பாயிரம்.

பொன்னிலமாதராசை பொருந்தினர்பொருந்தாருள்ளம்
தன்னிலந்தரத்திற்சீவ சாக்ஷிமாத்திரமாய்நிற்கும்
எந்நிலங்களினுமிக்க வெழுநிலமவற்றின்மேலாம்
நன்னிலமருவுமேக நாயகன்பதங்கள்போற்றி. (க)

ஈன்றளித்தழிக்குஞ்செய்கைக் கேதுவாமயனுமாலாய்
ஆன்றவீசனுமாய்த்தானே யநந்தமூர்த்தியுமாய்நிற்கும்
பூன்றமுத்தனுமாயின்பப் புணரியாதவனுநாளும்
தோன்றியவிமலபோத சொரூபத்தைப்பணிகின்றேனே.

எவருடையருளால்யானே யெங்குமாம்பிரமமென்பால்
கவருடைப்புவனமெல்லாங் கற்பிதமென்றறிந்து
சுவரிடைவெளிபோல்யானே சொரூபசுபாவமானேன்
அவருடைப்பதுமபாத மநுதினம்பணிகின்றேனே. (ங)

என்னுடைமனதுபுத்தி யிந்தியசரீரமெல்லாம்
என்னுடையறிவினாலே யிரவிமுன்னிமமேயாக்கி
என்னுடைநீயுநானு மேகமென்றைக்கியஞ்செய்ய
என்னுடைக்குருவாய்த்தோன்றுமீசனையிறைஞ்சினேனே

அந்தமுநடுவுமின்றி யாதியுமின்றிவான்போல்
சந்ததமொளிருஞான சற்குருபாதம்போற்றிப்
பந்தமும்வீடுங்காட்டப் பரந்தநூல்பார்க்கமாட்டா
மைந்தருமுணருமாறு வத்துதத்துவஞ்சொல்வேனே. (ரு)

படர்ந்தவேதாந்தமென்னும் பாற்கடன்மொண்டுமுன்னூற், குடங்களினிறைத்துவைத்தார் குரவர்களெல்லாங்காய்ச்சிக், கடைந்தெடுத்தளித்தேனிந்தக் கைவல்யநவநீதத்தை, அடைந்தவர்விடையமண்டின் றலைவரோபசியிலாரே. (சா)

முத்தனைவேங்கடேச முகுந்தனையெனையாட்கொண்ட
கத்தனைவணங்கிச்சொல்லுங் கைவல்யநவநீதத்தைத்
தத்துவவிளக்கமென்றுஞ் சந்தேகந்தெளிதலென்றும்
வைத்திருபடலமாக வகுத்துரைசெய்கின்றேனே. (எ)

பாயிரம் முற்றிற்று.

---

நூல்.

முதலாவது,

## தத்துவவிளக்கப்படலம்.

நித்தியவநித்தியங்க ணிண்ணயந்தெரிவிவேகம்
மத்தியவிகபரங்கள் வருபோகங்களினிராசை
சத்தியமுரைக்கவேண்டுஞ் சமாதியென்றுறுகூட்டம்
முத்தியைவிரும்புமிச்சை மொழிவர்சாதனமிந்நான்கே. ()

சமந்தமம்விடல்சகித்தல் சமாதானஞ்சிரத்தையாறும்
சமமகக்கரணதண்டந் தமம்புறக்கரணதண்டம்

அமர்தருகருமம்பற்று தறுத்தலேவிடலென்றாகும்
அமர்செயுங்காமமாதி வரினடக்குதல்சகித்தல். (௯)

சிரவணப்பொருளைத்தானே சித்தஞ்சிந்திக்குமாறு
சரதமாவைக்குமித்தைச் சமாதானமென்பர்மேலோர்
பரமசற்குருநூலன்பு பற்றலேசிரத்தையாகும்
வரமிகுசமாதியாறு வகையின்சொற்பொருளிதாமே. ()

சாதனமின்றியொன்றைச் சாதிப்பாருலகிலில்லை
ஆதலாலிந்தநான்கு மடைந்தவர்க்கறிவுண்டாகும்
நூதனவிவேகியுள்ள நுழையாதுநுழையுமாகில்
பூதசன்மங்கள்கோடி புனிதனாம்புருடனாமே. (௧௧)

இவனதிகாரியானோ னிந்திரியங்களாலும்
புவனதெய்வங்களாலும் பூதபௌதிகங்களாலும் [ம்பிப்
தவனமூன்றடைந்துவெய்யிற்சகித்திடாப்புழுப்போல்வெ
பவமறுஞானதீர்த்தம் படிந்திடப்பதறினானே. (௧௨)

ஆனவிம்மனைவிமக்க ளர்த்தவீடணைகண்மூன்றில்
கானவர்வலையிற்பட்டுக் கைதப்பியோடுமான்போல்
போனவன்வெருங்கையோடேபோகாதவண்ணஞ்சென்று
ஞானசற்குருவைக்கண்டு நன்றாகவணங்கினானே. (௧௩)

வணங்கிநின்றழுதுசொல்வான் மாயவாழ்வெனுஞ்
சோகத்தால், உணங்கினேனையனேயென் னுள்ளமேகுளி
ரும்வண்ணம்; பிணங்கியகோசபாசப் பின்னலைச்சின்னமா
க்கி, இணங்கியகுருவேயென்னை யிரக்ஷித்தல்வேண்டுமெ
ன்றான். (௧௪)

அன்னதன்சிசுவையைய னாமைமீன்பறவைபோலத், தன்னகங்கருதிநோக்கித் தடவிச்சந்நிதியிருத்தி, உன்னதுபிறவிமாற்று முபாயமொன் றுண்டுசொல்வேன், சொன்னதுகேட்பாயாகிற் றொடர்பவந்தொலையுமென்றான். ()

தொடர்பவந்தொலையுமென்று சொன்னதைக்கேட்டபோதே, தடமடுமூழ்கினான்போற் சரீரமுங்குளிர்ந்துள்ளாறி, அடருமன்பொழுகுமாபோ லாநந்தபாஷ்பங்காட்டி, மடன்மலர்ப்பாதமீண்டும் வணங்கிநின்றீதுசொல்வான். (௧௬)

சொன்னதுகேட்கமாட்டாத் தொண்டனானுஞ்சுவாமி
நின்னதுகருணையாலே நீரெனையாளலாமே
உன்னதுபிறவிமாற்று முபாயமொன் றுண்டென்றீரே
இன்னதென்றதைநீர்காட்டியீடேற்றல்வேண்டுமென்றான்

அடங்கியவிருத்தியானென்றறிந்தபின்செறிந்தமண்ணின், குடம்பையுட்புழுமுன்னூதுங் குளவியின்கொள்கைபோலத், தொடங்கியகுருவுமான்ம சொரூபமேமருவவேண்டி, உடம்பினுட்சீவனைப்பார்த் துபதேசமோதுவாரே. (௧௮)

வாராயென்மகனேதன்னை மறந்தவன்பிறந்திறந்து
தீராதசுழற்காற்றுற்ற செத்தைபோற்சுற்றிச்சுற்றிப்
பேராதகாலநேமிப் பிரமையிற்றிரிவன்போதம்
ஆராயுந்தன்னைத்தானென் றறியுமவ்வளவுந்தானே. (௧௯)

தன்னையுந்தனக்காதாரத் தலைவனையுங்கண்டானேல்
பின்னையத்தலைவன்றானாய்ப் பிரமமாய்ப்பிறப்புத்தீர்வன்

உன்னைநீயறிந்தாயாகி லுனக்கொருகேடுமில்லை
என்னைநீகேட்கையாலே யீதுபதேசித்தேனே. (௨०)

என்னைத்தான்சடனுவுள்ளத் தெண்ணியோசொன்னீரையா, தன்னைத்தானறியாமாந்தர் தரணியிலொருவருண்டோ, பின்னைத்தானவர்களெல்லாம் பிறந்திறந்துழலுவானேன், நின்னைத்தானம்பினேற்கு நிண்ணயமருளுவீரே. (௨க)

இன்னதுதேகந்தேகி யிவனெனவுணர்வான்யாவன்
அன்னவன்றன்னைத்தானென் றறிந்தவனுகுமென்முர்
சொன்னபின்றேகியாரித் தூலமல்லாமலென்முன்
பின்னதுகேட்டவையர் பீழையுநகையுங்கொண்டார். ()

தேகமல்லாமல்வேறே தேகியார்காணேனென்முய், மோகமாங்கனவில்வந்து முளைத்தவனெவனீசொல்வாய், சோகமாங் கனவுதோன்முச் சுழுத்திகண்டவனார் சொல்வாய், ஆகநீநனவிலெண்ணு மறிவுதானேதுசொல்வாய். ()

நனவுகண்டதுநான்கண்ட நனவுளநினைவுநீங்கிக்
கனவுகண்டதுஞ்சுழுத்தி கண்டதும்வேறென்றேபோல்
தினமநுபவிப்பதொக்குந் தெரியவுமில்லைசற்றே
மனதினிலுதிக்கும்பின்னே மறைக்குமதருளுவீரே. (௨௪)

தாலத்தின்மரங்கள்காட்டித்தனிப்பிறைகாட்டுவார்போல்
ஆலத்தினுடுக்கள்காட்டி யருந்ததிகாட்டுவார்போல்
தூலத்தைமுன்புகாட்டிச் சூக்குமசொரூபமான
மூலத்தைப்பின்புகாட்ட முனிவரர்தொடங்கினரே. ()

அத்தியாரோபமென்று மபவாதமென்றுஞ்சொல்லும்
உத்தியாற்பந்தம்வீடென் றுரைக்கும்வேதாந்தமெல்லாம்
மித்தையாமாரோபத்தாற் பந்தமாமபவாதத்தான்
முத்தியாமிவ்விரண்டின் முந்தியாரோபங்கேளாய். (உசு)

ஆரோபமத்தியாசங் கற்பனையாவவெல்லாம்
ஒரோர்வத்துவினில்வேறேயோரோர்வத்துவினையோர்தல்
நாரூடுபணியாய்த்தோன்ற னரணுகித்தறியிற்றோன்றல்
நீரூடுகானற்றோன்ற னிறந்தலம்வெளியிற்றோன்றல். (உஎ)

இப்படிப்போலநாம ரூபங்களிரண்டுமின்றி
ஒப்பமாயிரண்டற்றொன்றாயுணர்வொளிநிறைவாய்நிற்கும்
அப்பிரமத்திற்றோன்று மைம்பூதவிகாரமெல்லாம்
செப்புகற்பனையினாலே செனித்தவென்றறிந்துகொள்ளே.

அதுதானெப்படியென்றக்கா லநாதியாஞ்சீவரெல்
லாம், பொதுவானசுழுத்திபோலப் பொருந்துமவ்வியத்
தந்தன்னில்,இதுகாலதத்துவப்பேரீசனுட்பார்வையாலே,
முதுமூலசுபாவம்விட்டு முக்குணம்வியத்தமாமே. (உகூ)

உத்தமவெளுப்புச்செம்மை யுரைத்திடுகறுப்புமாகும்
சத்துவகுணத்தினோடு ரசோகுணந்தமோகுணந்தான்
சுத்தமோடழுக்கிருட்டாச் சொல்லுமுக்குணமுமொன்றாய்
ஒத்துளவேனுந்தம்மு ளொருகுணமதிகமாமே. (௩௦)

ஒருவழியிதுவாமித்தை யொருவழிவேறுச்சொல்வர்
மருவுமவ்வியத்தந்தானே மகதத்வமாகுமந்த

அருண்மகதத்துவந்தா னகங்காரமாகுமென்றும்
கருவகங்காரமூன்ருக் காட்டியகுணமாமென்றும். (௩க)

இக்குணங்களிலேவிண்போன் றிருக்குஞ்சிற்சாயை
தோன்றும், முக்குணங்களினுந்தூய்தா முதற்குணமாயை
யாகும், அக்குணப்பிரமச்சாயை யந்தரியாமிமாயை, எக்
குணங்களும்பற்ருதோ னிமித்தகாரணனுமீசன். (௩உ)

ஈசனுக்கிதுசுழுத்தி யிதுவேகாரணசரீரம்
கோசமானந்தமாகுங் குணமிராசதமவித்தை
தேசறுமவித்தைதோறுஞ் சிற்சாயைசீவகோடி
நாசமாமுயிர்க்கப்போது நாமமும்பிராஞ்ஞனுமே. (௩௩)

அழுக்கொடுபெற்றுஞ்சீவர்க் கதுவேயானந்தகோசம்
சுழுத்திகாரணசரீரஞ் சொன்னதிம்மட்டுமோக
முழுக்குணத்திரண்டால்வந்தமூலவாரோபஞ்சொன்னேம்
வழுத்துசூக்குமவாரோப வழியுநீமொழியக்கேளாய். ()

ஏமமாயாவினேத வீசனாருளினலே
பூமலியுயிர்கட்கெல்லாம் போகசாதனமுண்டாகத்
தாமதகுணமிரண்டு சத்தியாய்ப்பிரிந்துதோன்றும்
வீமமாமூடலென்றும் விவிதமாந்தோற்றமென்றும்.(௩௫)

தோற்றமாஞ்சத்திதன்னிற் சொல்லியவிண்ணும்விண்ணிற்
காற்றதாங்காற்றிற்றீயாங் கனலினீர்நீரின்மண்ணும்
போற்றுமிவ்வைந்துநொய்ய பூதங்களென்றுபேராம்
சாற்றுமற்றிவற்றிற்போக சாதனதநுவுண்டாகும். (௩௬)

ஆதிமுக்குணமிப்பூத மடங்கலுந்தொடர்ந்துநிற்கும்
கோதில்வெண்குணத்திலைந்து கூறுணர்கருவியாகும்
ஓதியபின்னையைந்து முளம்புத்தியிரண்டாஞான
சாதனமாமிவ்வேழுஞ் சற்குணப்பிரிவினாலே. (௩௭)

இராசதகுணத்தில்வேறிட் டெடுத்தகூறைந்துமைந்தும்
பிராணவாயுக்களென்றும்பெருந்தொழிற்கருவியென்றும்
பராவியபெயராமிந்தப் பதினேழுமிலிங்கதேகம்
சுராசுரர்நரர்விலங்காய்த் தோன்றியவுயிர்கட்கெல்லாம்.

இவ்வுடன்மருவுஞ்சீவ னிலங்குதைசதனென்றுவன்
இவ்வுடன்மருவுமீச னிரணியகர்ப்பனாவன்
இவ்வுடலிரண்டுபேர்க்கு மிலிங்கசூக்குமசரீரம்
இவ்வுடற்கோசமூன்று மிதுகனாவவத்தையாமே. (௩௯)

சூக்குமசடமிம்மட்டுஞ் சொல்லினேமிப்பாற்றூலம்
ஆக்குமாரோபந்தானு மடைவினின்மொழியக்கேளாய்
தாக்குமிவ்வுயிர்க்குத்தூல தநுவும்போகமுமுண்டாகக்
காக்குமவ்வீசன்பஞ்சீ கரணங்கள்செய்தான்றானே. (௪௦)

ஐந்துபூதமும்பத்தாக்கி யவைபாதிநந்நான்காக்கி
நந்துதம்பாதிவிட்டு நன்கொடுநான்குங்கூட்ட
வந்தனதூலபூத மகாபூதமிவற்றினின்றுந்
தந்தனநான்காந்தூல தநுவண்டபுவனபோகம். (௪௧)

தூலமேமருவுஞ்சீவன் சொல்லியவிசுவனாகும்
தூலமேமருவுமீசன் சொலும்விராட்புருடனாகும்

தூலமேயன்னகோசந் துன்னுஞ்சாக்கிரவவத்தை
தூலகற்பனையிதென்றுதொகுத்ததுமனத்திற்கொள்வாய்

சீரியவீசனார்க்குஞ் சீவர்க்குமுபாதியொன்றேல்
ஆரியகுருவேபேத மறிவதெப்படியென்றக்கால்
காரியவுபாதிசீவன் காரணவுபாதியீசன்
வீரியமிகுசமட்டி வியட்டியாற்பேதமாமே. (சங)

மரங்கள்போல்வியட்டிபேதம் வனமெனல்சமட்டிபேதம்
சரங்கடாவரங்கள்பேதந் தனியுடல்வியட்டியென்பார்
பரம்பியவெல்லாங்கூட்டிப் பார்ப்பதேசமட்டியென்பார்
இரங்கியபலசீவர்க்கு மீசற்கும்பேதமீதே. (சச)

கற்பனைவந்தவாறு காட்டினேன்காண்பவெல்லாஞ்
சொற்பனம்போலுமென்றே துணிந்தவன்ஞானியாவான்
செற்புதைதமழைக்காலம்போய்த் தெளிந்தவாகாசம்போல
அற்புதமுத்திசேறு மபவாதவழியுங்கேளாய். (சரு)

அரவன்று கயிறென்றுற்போ லாளன்று தறியென்றுற்போல், குரவன்சொல் லுபதேசத்தாற் கூறுநூ லொளியைக்கொண்டு, புரமன்று புவனமன்று பூதங்களன்று ஞானத், திரமென்னும் பிரமமென்று தெளிவதே யபவாதங்காண். (சசு)

படமுநூ லும்போற்செய்த பணியும்பொன் னும்போற்பூர்க்கில், கடமுமண்ணும் போலொன்றுங் காரியகாரணங்கள், உடன்முதற் சுபாவமீறு வொன்றிலொன்

றுதித்தவாறே, அடைவினி லொடுக்கிக்காண்ப தபவாத
வுபாயமாமே. (சஎ)

தூடணமதத்தில்வந்த தோற்றமாஞ்சத்திசெய்யும்
ஏடணைவிகாரஞ்சொன்னீ ரிரண்டுசத்திகளென்றீரோ
மூடலாஞ்சத்திசெய்யு மோகமுஞ்சொல்லுமையா
கேடறக்குருவேயென்னக் கிருபையோடருள்செய்வாரோ

தானிகர்தனக்காமீசன் றனையுந்தங்களைத்தாங்கண்ட
ஞானிகடமையுமன்றி நாஸ்திநபாதியென்னும்
ஊனிடையுயிர்களுள்ளத் துணர்விழிகுருடாம்வண்ணம்
வானிலந்திசைகண்மூடு மழைநிசியிருள்போன்மூடும். ()

பூன்றமாம்பிரமத்துக்கும் புறத்துளவிகாரங்கட்கும்
ஆன்றகூடஸ்தனுக்கு மகத்துளவிகாரங்கட்கும்
தோன்றியபேதஞ்சற்றுந் தோன்றுமன்மறைத்துமூடும்
ஊன்றியபவவியாதி யுண்டாக்குமுபாதியீதே. (ருo)

ஆதாரமறைந்துபோன லாரோபமெங்கேதோன்றும்
ஆதாரமறையாதாகி லாரோபமில்லையேயென்றால்
ஆதாரஞ்சமம்விசேட மாமெனவிரண்டுகூறும்
ஆதாரஞ்சமமாமெங்கு மாரோபம்விசேடமாமே. (ருக)

சகமதிலிதுவென்சுட்டாஞ் சமானந்தான்மறைந்திடாது
மிகவிதுகயிறுமென்னும் விசேடந்தான்மறைந்துபோகும்
அகமெனுஞ்சமானந்தன்னை யஞ்ஞானமறைத்திடாது
பகர்விசேடமதாஞ்சிவன் பரமெனுமதனைமூடும். (ருஉ)

கேவலநிலைதோன்றுமற் கெடுத்ததுபஞ்சகோசஞ்
சீவனுஞ்சகத்துமாகிச் செனித்தவிக்ஷேபமன்றோ
ஆவரணந்தானேபா ழுணர்த்தமென் றுரைத்ததேதோ
மேவருங்குருவேயென்று வினவிடின்மகனேகேளாய். ()

தோற்றமாஞ்சத்திதானுந் துன்பமாம்பவமானாலும், ஆற்றலான்முத்திசேர்வார்க் கனுகூலமாகுங்காணீ, ஊற்றமாம் பகற்காலம்போ லுபகார நிசியாலுண்டோ, மாற்றமென்னுணர்ப்பேன்மைந்தாமறைப்பதுமிகப்பொல்லாதே.

சுழுத்தியிற்பிரளயத்திற் றோற்றமாஞ்சகங்கண்மாண்டும்
அழுத்தியபவம்போய்முத்தி யடைந்தவரொருவருண்டோ
முழுத்தவிக்ஷேபமெல்லா முத்தியிற்கூட்டுகிற்கும்
கொழுத்தவாவரணமுத்தி கூடாமற்கெடுத்தகேடே. ()

சுத்தியில்வெள்ளிபோலத் தோன்றியதோற்றமான
சத்தியும்பொய்யேயென்றாற் சத்திசாதனமாவந்த
முத்தியும்பொய்யாமென்னின் மோகநித்திரைவிலங்கால்
நித்திரைதெளியுமாபோ னிருவாணநிலைமெய்யாமே. ()

இம்பரினஞ்சைநஞ்சா லிரும்பினையிரும்பாலெய்யும்
அம்பினையம்பாற்பற்று மழுக்கினையழுக்கான்மாய்ப்பர்
வம்பியன்மாயைதன்னை மாயையான்மாய்ப்பர்பின்னைத்
தம்பமாமதுவுங்கூடச் சவஞ்சுடுதடிபோற்போமே. (நள)

இந்தமாயையினாற்சீவர்க் கேழவத்தைகளுண்டாகும்
அந்தவேழவத்தைதம்மை யடைவினின்மொழியக்கேளாய்

முந்தவஞ்ஞானமுடன் முளைத்தல்காணாதஞானம்
சந்ததங்கண்டஞானந் தழல்கெடல்குளிர்மையாதல். ()

பிரமமாந்தனைமறந்த பேதைமையேயஞ்ஞானம், பரனிலை காணோமென்று பகர்தலா வரணமுடல், நரனொரு கருத்தாற்சீவ னானென முளைத்தறோற்றம், குரவன்வாக்கியத்தாற் றன்னைக் குறிக்கொளல் பரோக்ஷஞானம். ()

தத்துவவிசாரஞ்செய்து சகலசந்தேகமும்போய்
அத்துவிதந்தானாத லபரோக்ஷஞானமாகும்
கத்தனாஞ்சீவபேதங் கழிவதேதுக்கம்போகல்
முத்தனாயெல்லாஞ்செய்து முடிந்ததானந்தமாமே. (கூ0)

இதுநினக்கறியும்வண்ண மிப்படியொருதிட்டாந்தம்
புதுமையாங்கதைகேள்பத்துப் புருடரோராற்றைநீந்தி
உதகதீரத்திலேறி யொருவனொன்பதுபேரெண்ணி
அதனொடுதசமன்றானென் றறியாமன்மயங்கிநின்றான். ()

அறியாதமயலஞ்ஞான மவனில்லைக்காணோமென்றல்
பிறியாவாவரணமாகும் பீழைகொண்டழல்விக்ஷேபம்
நெறியாளன்றசமனுண்டு நிற்கின்றானென்றசொல்லைக்
குறியாகவெண்ணிநெஞ்சிற் கொள்வதுபரோக்ஷஞானம்.

புண்ணியபதிகன்பின்னும் புருடரொன்பதின்மர்தம்மை
எண்ணுநீதசமனாவை யென்னவேதன்னைக்காணல் [ல்
கண்ணிநிற்கண்டஞானங் கரைதல்போவதுநோய்போத
திண்ணியமனதிலையந் தெளிதலானந்தமாமே. (கூ௩)

தசபுமான் தனைக்கண்டாற்போற் சற்குருமூர்த்தியேயென்
நிசவடிவினையான்காண நீர்காட்டல்வேண்டுமென்றான்
சுசிபெறுமிலட்சியார்த்தந் துவம்பதந்தற்பதங்கட்
கசிபதவைக்கியஞ்செய்யு மதுசெயுமுண்மைகேளாய். ()

விண்ணொன்றைமகாவிண்ணென்று மேகவிண்ணென்றும்பாரின், மண்ணொன்றுகடவிண்ணென்று மருவியசலவிண்ணென்றும், எண்ணுங்கற்பனைபோலொன்றே யெங்குமாம்பிரமமீசன், நண்ணுங்கூடஸ்தன்சீவ னென்குசைதந்யமாமே. (சுரு)

பூச்சியவீசன்சீவன் புகல்பதமிரண்டினுக்கும்
வாச்சியம்லட்சியந்தான் மலமிலாப்பிரமமான்மா [கும்
காச்சியபாலினெய்போற் கலந்தொன்றுங்கடைந்தெடுக்
ஆச்சியமென்னவுன்னை யறிந்துநீபிரிந்துகொள்ளே. ()

பிறிவதெப்படியென்றக்காற் பிணமாகுமுடலுனென்னும்
அறிவினைக்கொல்லல்வேண்டு மைம்பூதவிகாரமன்றே
வெறியதோர்துருத்திமூக்கின் விடுவதுபோலுன்மூக்கால்
எறிபிராணனுநீயல்லை யிராசதகுணவிகாரம். (சுஎ)

கரணமாமனதுபுத்தி கருத்தாவாமவையான்மாவோ
தரமுளவிரண்டுகோசஞ் சத்துவகுணவிகாரம்
வரமறுதுயிலாநந்த மயனையுநானென்னாதே
விரவியதமவஞ்ஞான விருத்தியின்விகாரமாமே. (சுஅ)

சத்தொடுசித்தாநந்தஞ் சமந்திரஞ்சாக்ஷியேகம்
நித்தியம்வியாபியான்மா நீயதுவாயறிந்து

பொத்தொடுகெடந்துக்காதி பொருந்துபேதங்களான
குத்திரபஞ்சகோசக் குகைவிட்டுவெளியிலாவாய். (கூகூ)

பஞ்சகோசமும்விட்டப்பாற் பார்க்கின்றபொழுதுபாழே
விஞ்சியததுவல்லாமல் வேறொன்றுந்தெரியக்காணேன்
அஞ்சனவிருளையோநா னகமெனவநுபவிப்பேன்
வஞ்சமில்குருவேயென்ற மகன்மதிதெளியச்சொல்வார்.

முன்புகறசமன்புத்தி மோகத்தாலெண்ணியெண்ணி
ஒன்பதுபேரைக்கண்ட வொருவனுந்தனைக்காணாத
பின்பவனிடையிற்கண்ட பெரியபாழவனேபாராய்
அன்புளமகனேகாண்ப தடங்கலுங்காண்பானீயே. (எக)

தூலசூட்சுமவஞ்ஞானந் தோன்றுமூன்றவத்தைதாமும்
காலமோர்மூன்றுஞ்சன்மக் கடலெழுங்கல்லோலங்கள்
போலவேவந்துவந்து போனவெத்தனையென்பேனுன்
ஆலமர்கடவுளாணை யவைக்கெலாஞ்சாட்சிநீயே. (எஉ)

எல்லாங்கண்டறியுமென்னையேதுகொண்டறிவேனென்று, சொல்லாதே சுயமாஞ்சோதிச் சுடருக்குச்சுடர் வேறுண்டோ, பல்லார்முன்றசமன்றன்னைப் பார்ப்பதுந் தனைக்கொண்டேதான், அல்லாமற்பதினொன்றானு மவனிடத்துண்டோபாராய். (எஙு)

அறிவுக்குமறிவுசெய்யு மறிவுவேறுண்டென்றெண்ணும்
அறிவற்றகுதர்க்கமூடர்க் கனவஸ்தைபலமாய்த்தீரும்
அறிபடும்பொருணீயல்லை யறிபடாப்பொருணீயல்லை
அறிபொருளாகுமுன்னை யநுபவித்தறிவாய்நீயே. (எச)

மதுரமாங்கட்டிசுட்ட மாப்பணியாரமெல்லாம்
மதுரமாக்கியவதற்கு மதுரந்தான்சுபாவமன்றோ
அதுவிதுவெனுஞ்சடங்க ளறிவாகவறிவைத்தந்தே
அதுவிதுவிரண்டுமோகா வகம்பொருளறிவாய்நீயே. (எரு)

இந்தநீதுவம்பதத்தி னிலட்சியப்பொருளாமென்றும்
பந்தமில்பிரமமேதற் பதந்தனிலிலட்சியார்த்தம்
அந்தமாஞ்சீவனீச னவர்களேவாச்சியார்த்தம்
சந்ததம்பேதமாவார் தமக்கயிக்கியங்கூடாதே. (எசு)

பேதமானதுவுங்கேளாய் பெயராலுமிடங்களாலும்
ஓதருமுபாதியாலு முடலாலுமுணர்வினாலும்
பாதலம்விசும்புபோலப் பலதூரமகன்றுநிற்பர்
ஆதலாலிவர்க்கெந்நாளு மைக்கமென்பதுகூடாதே.(எஎ)

வடநூல்வல்லவர்கள்சொல்லும் வாசகப்பொருள்சேராமல், இடராகிற்பொருளாம்வண்ண மிலக்கணையுரையாற்கொள்வார், திடமானவதுவுமூன்றுச் செப்புவார்விட்டதென்றும், விடலிலாதென்றும்விட்டு விடாததென்றும் பேராமே. (எஅ)

கங்கையிற்கோஷமென்றங் கறுப்புச்சேப்போடுதென்றும், தங்கியசோயந்தேவ தத்தனென்றுஞ்சொல்வார்கள், இங்குதாரணங்களாக்கி யிந்தமூன்றுரைகளாலே, துங்கநூல்விரோதமான சொல்லெலாம்பொருளாந்தானே

பன்னியசோயமென்னும் பதங்களின்வாச்சியார்த்தம்
அன்னியதேசங்கால மவனிவனென்பவெல்லாம்

சொன்னவிவ்விரோதம்விட்டுத் தொடரிலக்கியம்விடாமல்
உன்னிடிற்றேவதத்த ளொருவனேவெளியாக்காட்டும். ()

தத்துவமெனும்பதங்கள் பிரமமாய்ச்சாட்சியான
வத்துவைவிடாமற்பேத வாச்சியார்த்தத்தைவிட்டு
நித்தமுமதுநீயாகு நீயதுவாகுமென்னும்
அர்த்தமுமகண்டமென்றே யசிபதவைக்கியங்காட்டும். ()

கடநீரின்மேகநீரிற் கண்டவானிரண்டும்பொய்யே
குடவானும்பெரியவானுங் கூடியொன்றுமெப்போதும்
இடமானபிரமஞ்சாட்சி யிரண்டுமெப்போதுமேகம்
திடமாகச்சுவாநுபூதி சிவோகமென்றிருந்திடாயே. (அ௨)

தஞ்சமாங்குருவுஞ்சொன்ன தத்துவவழிதப்பாமல்
பஞ்சகோசமுங்கடந்து பாழையுந்தள்ளியுள்ளில்
கொஞ்சமாமிருப்பும்விட்டுக் கூடஸ்தன்பிரமமென்னும்
நெஞ்சமுநழுவியொன்றாய் நின்றபூரணத்தைக்கண்டான்.

அனுபவாநந்தவெள்ளத் தழுந்தியேயகண்டமாகித்
தனுகரணங்களாதி சகலமுமிறந்துசித்தாய்
மனதுபூரணமாய்த்தேக மானசற்குருவுங்காண
நனவினிற்சுழுத்தியாகி நன்மகன்சுபாவமானான். (அச)

அளிமகனெடும்போதிவ்வா றுனபின்மனதுமெள்ள, வெளியில்வந் திடவுணர்ந்தான் விமலதே சிகனைக்கண் டான், துளிவிழிசொரியப்பாதந் தொழுதுவீழ்ந்தெழுந்து சூழ்ந்தான், குளிர்முகச்சுவாமிகேட்கக் கும்பிட்டுநின்று சொல்வான். (அரு)

ஐயனேயெனதுள்ளேநின் றநந்தசன்மங்களாண்ட
மெய்யனேயுபதேசிக்க வெளிவந்தகுருவேபோற்றி
உய்யவேமுத்திநல்கு முதவிக்கோருதவிநாயேன்
செய்யுமாறென்றுங்காணேன் றிருவடிபோற்றிபோற்றி.

சிட்டனிவ்வாறுகூறத் தேசிகர்மகிழ்ந்துநோக்கிக்
கிட்டவாவெனவிருத்திக் கிருபையோடருளிச்செய்வார்
துட்டமாந்தடைகண்மூன் றுந்தொடராமற்சொரூபஞான
நிட்டனாயிருக்கினீதே நீசெய்யுமுதவியாமே. (அஎ)

நீநானென்றிரண்டிலாம னிறைந்தபூரணமாயெங்கும்
நானாகத்தெளிந்தஞான நழுவுமோகுருவேயென்றான்
தானாகும்பிரமரூபஞ் சற்குருநூலாற்றோன்றும்
ஆனாலுந்தடைகளுண்டே லநுபவமுறைத்திடாதே.(அஅ)

தடையெவையெனிலஞ்ஞான சந்தேகவிபரீதங்கள்
படர்செயுமிந்தமூன்றும் பலசன்மப்பழக்கத்தாலே
உடனுடன்வரும்வந்தக்கா லுயர்ஞானங்கெடுமிவற்றைத்
திடமுடன்கெடுப்பாய்கேட்டல் சிந்தித்தறெளிதலாலே.

அக்கினிகட்டப்பட்டா லற்பமுஞ்சுடமாட்டாது
மக்கினஞானத்தாலே வந்தபந்தமும்வேவாது
சிக்கெனப்பழகிக்கேட்டால் சிந்தித்தறெளிதலாலே
விக்கினமடஞ்சந்தேகம் விபரீதம்போக்குவாயே. (கூ0)

பிரமபாவனையைமூடிப் பேதங்காட்டுவதஞ்ஞானம்
குரவன்வாக்கியம்நம்பாமற் குழம்புவதாஞ்சந்தேகம்

திரமறுசகமெய்யென்றுந் தேகநானென்றுமுள்ளே
விரவியமோ.கந்தானே விபரீதமென்பர்மேலோர். (கூக)

தத்துவவநுபோகந்தான் சாதித்தல்கேட்டலென்பார்
ஒத்துளபொருளேகத்தா னுசாவல்சிந்தித்தலென்பார்
சித்தமேகாந்தமான தெரிசனந்தெளிதலென்பார்
நித்தமிப்படிசெய்தக்கா னிர்வாணம்பெறுவாய்நீயே. ()

எத்தனைநாண்ஞாதாவு ஞானமுமிருக்குமுன்பால்
அத்தனைநாளும்வேண்டு மப்பாலோர்செயலும்வேண்டா
நித்தமும்வெளிபோற்பற்று ஞேயமாத்திரமாய்ச்சீவன்
முத்தரானவர்விதேக முத்திபெற்றிருப்பாரென்றும். ()

ஞானமார்சீவன்முத்தர் நால்வகையாவர்கேளாய்
வானிகர்பிரமவித்து வரன்வரியான்வரிட்டன்
ஆனவர்நாமமாகு மவர்களிற்பிரமவித்தின்
தானமுமற்றைமூவர் தாரதம்மியமுஞ்சொல்வேன். (கூச)

தீரராய்ப்பிரமவித்தாய்த் தெளிந்தவர்தெளியுமுன்னம்
வாரமாயிருந்ததங்கள் வருணமாச்சிரமஞ்சொன்ன
பாரகாரியமானாலும் பலர்க்குபகாரமாக
நேரதாச்செய்வர்தீர்ந்த நிலைவிடார்சீவன்முத்தர். (கூரு)

காமமாதிகள்வந்தாலுங் கணத்திற்போமனத்திற்பற்றார்
தாமரையிலைத்தண்ணீர்போற் சகத்தொடுங்கூடிவாழ்வார்
பாமரரெனக்காண்பிப்பார் பண்டிதத்திறமைகாட்டார்
ஊமருமாவாருள்ளத் துவகையாஞ்சீவன்முத்தர். (கூசு)

பேதகர்மத்தால்வந்த பிராரத்தநாநாவாகும்
ஆதலால்விவகாரங்க ளவரவர்க்காவவாகும் [வார்
மாதவஞ்செயினுஞ்செய்வார் வாணிபஞ்செயினுஞ்செய்
பூதலம்புரப்பாரையம் புகுந்துண்பார்சீவன்முத்தர். (கூஎ)

சென்றது கருதார்நாளைச் சேர்வது நினையார்கண்முன், நின்றதுபுசிப்பார்வெய்யி னிலவாய்விண்விழுதுவீழ்ந்து, பொன்றினசவம்வாழ்ந்தாலும் புதுமையாவொன்றும்பாரார், நன்றுதீதென்னார்சாக்ஷிநடுவானசீவன்முத்தர்.

பின்னைமூவரிலிரண்டு பேர்களுஞ்சமாதியோகம்
தன்னையுற்றிருப்பார்தேக சஞ்சாரநிமித்தந்தானும்
உன்னுவோன்வரன்வேற்றோரா லுணர்பவன்வரியானாகும்
அன்னியர்தம்மாற்றன்னா லறியாதோன்வரிட்டனாமே. ()

அரிதாகுமிவர்களிவ்வா றநேகரானாலுமுத்தி
சரியாகும்பாடுபட்ட சமாதிக்குப்பலனேதென்றால்
பெரிதானதிருஷ்டதுக்கம் பிரமவித்தநுபவிப்பன்
வரியானும்வரனுமற்றை வரிட்டனுஞ்சுகமாய்வாழ்வார். ()

பிரமஞானிகளுங்கர்மப் பேதையர்போலேவாழ்ந்தால்
திரமுறுமஞ்ஞானம்போய்ச் செனியாதவழியேதென்றால்
பரவுமாகாசமொன்றிற் பற்றுதுமற்றைநாலும்
விரவினதோடுங்கூடும் விதமிருவோருமாவார். (கoக)

சீவன்முத்தரைச்சேவித்தோர் சிவனயனெடுமாலான
மூவருமகிழநோன்பு முழுவதுஞ்செய்துசன்ம

பாவனமாளுரென்று பழமறைமுழங்குமிப்பால்
மேவருஞ்சீவன்முத்தர் விதேகமுத்தியுநீகேளாய். (கOஉ)

பஞ்சினையூழித்தீப்போற் பலசன்மவிவிதவித்தாம்
சஞ்சிதமெல்லாஞானத் தழல்சுட்டுவெண்ணீறுக்கும்
கிஞ்சிதாகாமியந்தான் கிட்டாமல்விட்டுப்போகும்
விஞ்சினபிராரத்தத்தின் வினையநுபவித்துத்தீரும்.(கOங)

பொறுமையாற்பிராரத்தத்தைப் புசிக்குநாட்செய்யுங்கர்மம், மறுமையிற்றொடர்ந்திடாமல் மாண்டுபோம்வழியேதென்றால், சிறியவரிகழ்ந்துஞானி செய்தபாவத்தைக்கொள்வார், அறிவுளோரறிந்துபூசித் தறமெலாங்கைக்கொள்வாரே. (கOச)

அறியமெஞ்ஞானத்தீயா லவித்தையாமுடனீறுகும்
பெரியதூலமுங்காலத்தாற் பிணமாகிவிழுமந்நேரம்
உரியசூக்குமசரீர முலையிரும்புண்டநீர்போல்
துரியமாய்விபுவாய்நின்ற சொரூபத்திலிறந்துபோமே. ()

கடமெனுமுபாதிபோனுற் ககனமொன்றுனுற்போல
வுடலெனுமுபாதிபோன வுத்தரஞ்சீவன்முத்தர்
அடிமுடிநடுவுமின்றி யகம்புறமின்றிநின்ற
படிதிகழ்விதேகமுத்திப் பதமடைந்திருப்பரொன்றும். ()

சொல்லியமகனேயெங்குஞ் சூழ்வெளியிருக்கமண்ணைக்
கெல்லியபின்புதோன்றுங் கிணற்றிஞகாசம்போலே
ஒல்லையாம்பிரமநூலா லுற்றதுபோலேதோன்றும்
எல்லையினுமெப்போது மேகமென்றிருந்துவாழ்வாய். ()

கானனீர்கிளிஞ்சில்வெள்ளி கந்தர்ப்பநகர்கனூர்
வானமைகயிற்றிற்பாம்பு மலடிசேய்முயலின்கோடு
மீனமாந்தறிபுமானிற் பிரபஞ்சமெல்லாம்பொய்யே
ஞானமெய்மகனேயுன்னை நம்மாணைமறந்திடாதே.(௧0௮)

முதலாவது,

தத்துவவிளக்கப்படலம் முற்றிற்று.

படலம் க-க்கு திருவிருத்தம் - ௧0௮.

3681

இரண்டாவது,

## சந்தேகந்தெளிதற்படலம்.

நரர்குழிபறித்துமெள்ள நாட்டியநெடியகம்பம்
உரமுறக்குத்திக்குத்தி யுறைப்பிக்குமுபாயம்போலே
பரமசிற்சொரூபந்தன்னிற் பற்றியமனோவிருத்தி
திரநிலைபெறச்சந்தேகந் தெளிதலைமொழிகின்றேனே.(௧)

நற்கருத்துடையோனாகி ஞானவானாகிநின்றோன்
மர்க்கடநியாயம்போலே மகாபூதவிகாரந்தொட்டு
நிர்க்குணவிதேகமுத்தி நிலைபரியந்தஞ்சொன்ன
சற்குருவினைவிடாமற் சந்ததமநுசரித்தான். (௨)

சந்ததம்புருடன்றன்னைச் சாயைபோல்விடாமலன்பாம்
மைந்தனைநோக்கிச்சாக்ஷி மாத்திரமாய்நின்றுயோ
சிந்தையிலையமெல்லாந் தீர்ந்தவோதெளிவினுள்ளே
அந்தரங்கலந்ததுண்டோ வநுபவமுரைசெய்வாயே. (௩)

எனவுரைத்தருளுமாசா னிருபதம்வணங்கியெந்தாய்
சனனவன்காட்டின்மோகத் தமத்தெழுபேதப்பேய்கள்
உனதருளுதயவெற்பி லுபதேசவருக்கன்றோன்றி
மனவிழிதெரியஞான வான்கதிர்பரந்தாலுண்டோ. (௪)

மந்திரமூர்த்திதன்னுன் மாற்றியபேய்போனாலும்
எந்திரமெழுதிக்கட்டி யினிவராவகைசெய்வார்போல்
முந்தியுன்னுபதேசத்தான் மோகம்போனாலுமையா
புந்திநின் றுறைக்கவின்னம் புகலும்விண்ணப்பமுண்டே.

ஆகமப்பிரமாணத்தா லறியென்றும் வாக்குக்கெட்டா, தேகமாம்பிரமமென்று மிதயத்தாலுணர்வாயென்றும், சோகமாமனத்திற்கெட்டாச் சுயஞ்சோதியென்றுஞ்சொன்னீர், மோகமாமிரண்டுசங்கை முளைத்தனபறித்திடீரே. (௫)

மற்றைமுப்பிரமாணத்தால் வத்துநிண்ணயங்கூடாதே
உற்றதோர்விடயம்பூத முபயமன்றாதலாலே
குற்றமாங்குணவிசேடங் கூடாமலிருக்கையாலே
இற்றதுவாக்குக்கெட்டா தென்பதுமறிவாய்நீயே. (௭)

வாக்கியந்தனக்கெட்டாது வத்துவென்றுரைத்தவேதம்
வாக்கியவிருத்தியாலவ் வத்துவைக்காட்டிற்றன்றே
வாக்கியங்களிலேமான மாவதேதென்றாயாகில்
வாக்கியமிரண்டுமெய்யே மறைகள்பொய்யாதுகேளாய்.()

தன்பதியல்லாப்பேர்க டமையல்லனல்லனென்றாள்
அன்பனைக்கேட்டநேர மவள்வெட்கிமௌனமானாள்

என்பதுபோலநீக்கி யிதன்றிதன்றெனச்சேடித்த
பின்பரப்பிரமந்தன்னைப் பேசாமற்காட்டும்வேதம். (கூ)

முந்தியசங்கைதீர மொழிந்ததையறிந்துகொள்வாய்
பிந்தியசங்கைதீரப் பேசுமுத்தரநீகேளாய்
இந்தியங்களுக்கிராச னிதயமாமதினெண்ணங்கள்
புந்தியுமனமுமென்றே புறத்தகத்துலாவியாடும். (க0)

உன்முகம்போற்கண்ணாடிக் குள்ளொரு முகங்கண்டாற்போல், சின்மயவடிவின்சாயை சித்துப்போற்புத்தி தோன்றும், நின்மனோவிருத்தியந்த நிழல்வழியாயுலாவும், தன்மநன்மகனேயித்தைத் தானன்றோஞானமென்பார்.()

உருக்கியதராநீர்நாநா வுருவங்களானாற்போல, விருத்திகள்கடபடாதி விடயமாய்ப்பரிணமிக்கும், அருப்பல விடயமெல்லா மாபாசன்றோற்றுவிக்கும், இருட்டினில் விளக்குங்கண்ணு மில்லாமற்பொருள்காணாதே. (கஉ)

எரிகின்றவிளக்காற்கண்ணா லிருட்பொருள்காணல் வேண்டும், தெரிகின்றபரிதிகாணச் சென்றிடிற்கண்ணே போதும், விரிகின்றசகத்தைக்காண விருத்தியும்பலமும் வேண்டும், புரிகின்றவிருத்தியொன்றேபோதுமெய்ப்பொருள்காண்போர்க்கே. (கஙு)

விருத்தியும் பலமுங்கூடும் விகாரமே மனமென்பார்கள், கருத்தெழுவிருத்திவேண்டுங் கணக்கினன்மனத்திற்கெட்டும், வருத்தியபலமாமிந்த மனத்திற்கெட்டாதுகண்

டாய், அருத்தமிப்படியென்றைய மகன்றுநீ தெளிந்தி டாயே. (கச)

### வே று.

வஞ்சகமில்பரமார்த்த குருவேசொன்ன வழிகளறிந் தேனினியோர் வசனங்கேளீர், சஞ்சலமற்றகண்டபூ ரண மாய்ச்சித்தந் ததாகாரமாவதன்றே சமாதியோகம், உஞ் சலையொத்தலைவதுதன் சுபாவமாகி யொருகணத்திற் பல யுலகா யுதிக்குமிந்த, நெஞ்சகம்வத்துவிலசையா நிவாத தீப நிலையடைவதெப்படியோ நீர்சொல்வீரே. (கரு)

கருதுமனேகுணமூன்று மூன்றிலொன்று கதித்தெ ழுந்தான் மற்றிரண்டுங் கரந்துநிற்கும், தருமமிகுஞ்சத்து வமே லானபோது சன்மார்க்கமானதெய்வ சம்பத்துண் டாம், மருவுரசோகுணமாகி லுலகதேக வாதனையாஞ்சா த்திரவா தனையுமாகும், அருமகனேதமோகுண மேலான போதி லசுரசம்பத்துண்டாகு மறிந்துகொள்ளே. (கசு)

மனதுசத்துவ சொரூபமற்றிரண்டும் வந்துகலந் தன வவற்றை மாற்றினற்போம், தனதுசன்மார்க்கத்தை விடா திருந்தபோது தமோகுணமும் ரசோகுணமுஞ் சமிக்கும் பின்னைக், கனபரிணமஞ்சலனம் போம்போனக்காற் களங்கமற்றுநின்றவா காசம்போலும், நினதுளமப்படியாமப் பிரமத்தொன்றாய் நிருவிகற்பசமாதியிலே நிற்குந்தானே.

களங்கமற்றகண்ணாடி தன்முன்வேறோர் களங்கமற்ற கண்ணாடி காட்டும்போது, விளங்கியதன்மயமாகி யபேத

மாகி விகர்ப்பமின்றி நிருவிகர்ப்பமானாற்போல, அளந்த றியப்படாவிபுவாய்ச்சத்தாய்ச்சித்தாயாநந்தமாம் பிரமத் தைக்கியமான, உளந்தெளிந்தபடியிருந்தா னுலகமெங்கே யுலைவெங்கே யென்றுசங்கை யொழித்திடாயே. (கஅ)

ஏகமாய் மனமிறந்தார்சீவன்முத்த ரிருக்கட்டும் பிரா ரத்தமெதினானுண்பார், போகமானதுபுசித்துத் தொலைப் பதன்றோ புசிப்பதென்றான் மனந்தானும் போனதன்றே, சோகமா மனமிருந்தாற் போகமில்லை தோன்றுமெனின்முத் தரென்று சொலக்கூடாதே, மோகமாமிதுதெளியக் குரு வேநன்றா மொழிந்தருள்வாய் தெளிந்ததன்றோ முத்தி தானே. (கக)

மனநாசஞ் சொரூபமென்று மரூபமென்றும் வகுத் துரைப்பா ரிருவகையா வருமிவற்றில், வினவாதசீவன் முத்த ரிடத்திலொன்றும் விதேகமுத்த ரிடத்திலொன்று மேவுங்கண்டாய், தனதானசத்துவமாய் மனஞ்சேஷித் துத் தமசுரசசுகணசித்தல் சொரூபநாசம், அனகாசத் துவந்தானுமிலிங்கதேக மடங்கும்போ தடங்குதலே யரூ பநாசம். (உ0)

சுத்தமாஞ் சத்துவமே யுண்மையாகுந் துகளிருள் போனான்மனமென் சொல்லும்போம்போம், வர்த்தமான த்தில்வந்த வுணவையுண்பார் வருவதும்போவது நினைந்து மகிழார்வாடார், கர்த்தராமகந்தையைவிட் டகர்த்தராகிக் க்ரணவிருத்திகளவத்தை காண்பாராகி, முத்தராயிருக்க வாமாம் புசிப்புங்கூடு முட்டிலையென்றறிந்துசங்கை மோசி ப்பாயே. (உக)

விவகாரவேளையெலாஞ் சமாதியென்றால் விகற்பமன்றோ மனமலைந்து விடாதோ விட்டால், அவதானநழுவு மன்றோவென்றாயாகி லதற்கொரு திட்டாந்தங் கேளாசை கொண்டு, நவமாகப்பரபுருடன்றன்னைக்கூடி நயந்தசுகமநுபவித்தநாரிநெஞ்சந், தவமாக மனைத்தொழில்கள் செய்யும்போதும் தழுவியநுபவித்தசுகந் தனைவிடாதே. (உ௨)

தேகத்தனலனாகி யகர்த்தனாகிச் சீவனின்றிப் பிரமமாய்த் தெளிந்தமுத்தன், போகத்தை யுண்பனென்றாற் கருந்தாவாமே பூரணமா முகர்த்தனுக்குப் போகமுண்டோ, சோகத்தையருத்தருளுங் குருவேயிந்தத் துகளறுக்கவேண்டுமென்று சொன்னாயாகில், மாகர்த்தன் மாபோகிமாத்தியாகி வகைமூன்றா யவரிருக்கு மகிமைகேளாய்.()

செய்கையுஞ் செய்விக்கையுமற் றிருக்குங்காந்தச்சிலை மலைமுன்னிரும்புகள் சேட்டிக்குமாபோல், செய்கையுஞ் செய்விக்கையுமற்றிருக்கு மென்முன் செடமானவுலகமெலாஞ் சேட்டைசெய்யும், மெய்கலந்தவிந்திரிய விகாரரூப விவகாரவிருத்திக்கும் விருத்திதானா, மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சியேநான் வெயில்போலென் றுறைத்தவனே விபுமாகர்த்தன். (உச)

அறுசுவையின் குணங்குற்ற மசுத்தஞ்சுத்த மபத்தியம் பத்தியமெனவூனாய்ந்திடாமல், பொறுமையுடன்கிட்டினதைக் காட்டுத்தீப்போற் போகங்கள் புசிப்பவன்மா போகியாகும், சிறிதுபெரி துகடனந்த நியங்கணன்மை

தீனைகள்சேரினும்படிகச் செயல்போற்சித்தம், வெறிதிரு
க்குமவனே மாத்தியாகியாவன் விரதமிம்மூன் றுடைய
வரே வீடுளோரே. (உரு)

வேறு.

மெய்யுங்கொண்டு பிராரத்தந்தரு விதிவழிநின்றிட
வும், உய்யுங்கர்மிக ளுக்கநுகுணமா வுறிதொழில்செய்தி
டவும், செய்யுஞ்செய்கை முடிந்தவனென்றுரை செப்புவ
தெப்படியோ, நையுந்துன்ப மகற்றியகுருவேநலமாவருள்
வீரே. (உசூ)

ஆடவர்செய்தொழின் மூவகையாகு மவித்தைவந்
துறுநாள், ஏடணைமமதையகந்தையுளார்க்கே யிகபரவிவ
காரம், வீட ணுகுவமெனு மிச்சையுளார்க்கே வித்தைபடி
ப்பதெலாம், பாடன்மிகுந்தொழி லாற்பலனுண்டோ பரி
பூரணமானால். (உஎ)

குரவர்சிகாமணி யேகேளீர்நீர் கூறினவழியொக்கும்,
பரமுடநிகழு மிழந்தவரன்றோ பழகுவர்மெய்ஞ்ஞானம்,
விரவுமுயற்சியின் மீண்டவரதையினி வேண்டுவரோவே
ண்டார், சிரவணமனனு திகள்வேண்டாவோ சித்தமுறை
த்திடவே. (உஅ)

கிளர்மகனேகேள் தத்துவமறியார் கேட்டல்செயக்
கடனே, தளர்வறுசிந்தித் தலின்முயல்வார்சிலர் சந்தேக
ங்களுளார், தெளிதலினிற்பார் விபரீதப்பேய் தீராவாத
னையோர், வெளியுருவாயறி வாய்நிறைவாயினர் வேண்டு
வதொன்றுண்டோ. (உகூ)

ஐயாகேளீர் தத்துவஞானியு மஞ்ஞானிகள்போலே, செய்யாநின்றேன் கண்டேனுண்டேன் சென்றேனென லாமோ, பொய்யாம் விபரீதங்களவற்குப் போயினவென் றீரே, மெய்யாம்பிரம விசாரமிவன்றே வெளியாவுரை யீரே. (௩0)

ஓய்ந்தகனவிற் கண்டபழங்கதை யோதுவன்வாதனை யால், ஆய்ந்தறிவுற்றவனப்படிசெப்புவனுபாசனுமாகான், மாய்ந்ததனுடல் வேமளவும் விண்ணவன் மநுடனெனப் படுவான், வீய்ந்தசிதாபாசன் போமளவும் விவகாரந்தொ டரும். (௩௧)

ஆனாலையா குருவேகாண்ப தசத்திய மென்றாலும், நானாவிவகாரந் துயரலவோ ஞானசுகந்தருமோ, போனா லன்றோநன்றாநிட்டை பொருந்திடல்வேண்டாவோ, தானு நிட்டை புரிந்தாற்செய்கை தவிர்ந்தவனெப்படியோ. ()

தெரிதருமகனே யாரம்பத்தொடு தீரும்விவகாரம், உரியதியானமும் விவகாரங்களு முள்ளத்தொழிலன்றோ, துரியபரம்பொரு ளானவர் வேறொரு தொழில்செய்வது முண்டோ, அரியசமாதிகள் பழகுவனேலவ னூடனு மன்றே. (௩௩)

உத்தமகுருவே யாருடருமா யொருதொழிலற்றவ ருள், சித்தமடங்கு தியானாதிகள்சிலர் செய்குவதென்னெ ன்றால், இத்தலமருவும் பிராரத்தப்பிறி வெப்படி யப்ப டியே, முத்தரும்வெகு விதமாகுவரென்பது முன்னேசொ ன்னேனே. (௩௪)

நல்லவனேகே ளுலகுபகாரம் ஞானிகள்விவகாரம்
அல்லதுவேறொரு பெறுபேறும்மிலை யதனாற்பிணியுமிலை
வல்லசிருட்டி முதற்பலதொழிலால் வருபுண்ணியபாவம்
எல்லவருக்கு மநுக்கிரகஞ்செயு மீசனடைந்திலனே. ()

ஈசனுமாயரு வாயுருவாகி யெழுந்தருளுங்குருவே
ஈசனுஞானியு மொப்பென்றீரே யெப்படியொப்பென்றால்
ஈசனுஞானியு மமதையகந்தை யிகந்ததினலொப்பாம்
ஈசனுமாம்பல் சீவருமாமுல கெல்லாமிவனுமே. (ரு௬)

எல்லாச்சீவரு மிவனுமென்றீ ரிவன்றான் முத்திய டைந், தெல்லாச்சீவரு முத்திபெறும விருப்பானேனையா, எல்லாச்சீவரும் வெவ்வேறுன விவனெல்லாமலனே, எல் லாப்பொருளு முரைத்தருள்குருவேயிதைநீர்மொழியீரோ.

அகமெனுமான்மா பூரணமேக மநேகவிதஞ்சீவர்
அகமெனுமந்தக் கரணோபாதிக ளளவிலையாதலினல்
சகமுழுதுங்குளிர் சந்திரனேகஞ் சலசந்திரர்பலராம்
சகமதிலேரி குளஞ்சிறுகுழிசால் சட்டிகுடம்பலவால். ()

சட்டிகுடங்களி லொன்றுநசித்திட னதினுட்சலசந்திரன்
ஒட்டுமுதற்சந் திரனெடுகூடு மொழிந்தவைகூடாவே
கட்டுமுபாதி நசித்திடுசீவன் காரணவான்மாவில்
கிட்டுமெயிக்கிய முபாதிகெடாதவர் கேவலமாகாரோ. (ரு௯)

இவனயுன்மால்சிவ ஞகியவீசரோ டெப்படியொப்பாவன்
சிவன்முதன்மூவரு மகிலசிருட்டித் திதிநாசங்கள்செய்வார்

அவர்பிறர்மதிகளு முக்காலங்களு மறிவார்விபுவாவார் தவமிகுகுருவேயிவனுக்கவையிலோர் சற்றுங்காணேனே.

தடத்துநீர்நிலாத் திரியொளியுபயமுந் தழுவுமூர்த னைக்காக்கும், குடத்துநீர்விளக்கினி லொளியிரண்டுமோர் குடும்பமாத்திரங்காக்கும், அடுத்தமைந்தனே ஞானியுமீ சனு மறிவினுற்பிறிவில்லை, கெடுத்தமாயையின் குணங்க ளான் மேலென்றுங் கீழென்றும்பிரிவாமே. (௪௧)

நரரின்மன்னனைச்சித்தனைப்போலவே நாரணன்முத லான, சுரர்கண்மாயைவல்லவரணிமாதிக டொக்கமாதவ மிக்கோர், தாணிமாநுடர்க்கவைகளில்லாமையாற் றாழ்வு ளராநுலும், பிரமபாவனையாலிவரவரெனும் பேதமொன் றிலைபாராய். (௪௨)

முத்திநல்கியசற்குருவேபலமுனிகளுக்கணிமாதி, சித் திபூமியிற்கண்டிருக்கவுமந்தச் செல்வமீசனதென்றீர், புத் தியொத்திட வுரைத்தருளென்றிடிற்புகழுமீசனைநோக்கிப், பத்திசெய்திடுந்தவத்தினுலியோகத்தாற் பலித்ததென்றறி வாயே. (௪௩)

சிவசொரூபமாந் தேசிகமூர்த்தியே சித்திமுத்தியிர ண்டும், தவமுளோரடைகுவரெனிலவர்கள்போற் சகலரு மடைவாரே, அவர்கள்பூருவஞ்சித்தியுஞானமு மடைந்த துங்கண்டோமே, இவர்கண்ஞானிக ளென்றிடிற்சித்திக ளிவர்க்கிலாவகையேதோ. (௪௪)

காமியத்தவங் காமியமொன்றையுங் கருதிடாத்தவ மென்றும், பூமியிற்றவ மிருவகைசித்தியும் போதமுந்தரு மைந்தா, ஆமிவற்றிலொன் றியற்றினுலொன்றையேயடை குவரிதுதீர்வை, யாமுனைத்தவவ் விரண்டையு மியற்றினு ரன்றுள பெரியோரே. (சரு)

அனகமைந்தனே முத்திஞானத்தையே யடைந்தன ரல்லாமல், ஜெனகன்மாபலி பகீரதன்முதலினோர்சித்திகள் படித்தாரோ, இனியசித்தியே விரும்பினார்சிலர்சில ரிரண் டையுமுன்றுரம், முனிவர்சித்திகள் வினோதமாத்திரந்தரு முத்தியைத் தாராவே. (சசா)

யோகஞானமே முத்தியைத்தருமெனி லொழிந்தசித் திகள்வேண்டி, மோகமாயுடல் வருந்தினார்சிலசில முத்தர் களேனென்றால், போகமாய்வரும்பிராரத்தகர்மங்கள் புசி த்தன்றோ நசித்தேகும், ஆகையாலந்தச் சித்திகள்பிராரத் தமாகுமென் றறிவாயே. (சஎ)

இலக்கமாயிரஞ் சுருதியாலூகத்தா லென்மனமசை யாமல், பெலக்கவேண்டுமென் றருள்குருவேயகப் பிராந் திபோய்த் தெளிவானேன், துலக்கமானகண்ணாடியையடி க்கடி துலக்கினுற்பழுதன்றே, அலக்கண்மாற்றிய தேவரீ ரொனக்குனை யமிர்தங்கடெவிட்டாவே. (சஅ)

கைதவங்களைச் சாத்திரஞ்சொல்லுமோ கருணையா லெணையாளும், ஐயனேகுருவே யெவராகினு மநுபவித்தா லன்றிச், செய்தகர்மங்கள் விடாவென்றவசனமுஞ் சென்

மசஞ்சிதம்வேவத், துய்யஞானத்தீச் சுடுமென்ற வசன
முந் துணிவதெப்படிநானே. (௪௯)

சீவபேதங்க ளளவிலைமைந்தனே செய்கையுமளவி
ல்லை. ஆவவாமவ ரவரதிகாரங்க ளறிந்துபக்குவநோக்கிப்,
பூவலர்ந்துபின் பலங்கள்காட்டுவனபோற் பூருவஞ்சித்தா
ந்தம், காவல்வேதங்க ளிரண்டையும்வசனிக்குங் காண்ட
மூவகையாலே. (௫௦)

ஆனபாவிக ளடைவன நரகங்க ளவசியமானாலும்,
தானமந்திர விரதவோமங்களாற் றவிருமென்பது பொய்
யோ, ஈனமாம்பல சன்மசஞ்சிதவினை யெத்தனை யானா
லும், ஞானமாங்கனல் சுடுமென்றமறைமொழி நம்பினால்
வீடுண்டே. (௫௧)

என்மனந்திருக் கோயிலாத் தினங்குடி யிருந்தருள்
குருமூர்த்தீ, சென்மசஞ்சித வினைகள்வே றுத்திடுந் தேவ
ரீர் மெய்ஞ்ஞானம், தன்மயந்தரு மகிமையை விபுதராஞ்
சமர்த்தருமறியாமல், கன்மமாங்குழி யினில்விழுந்தழிகி
ன்ற காரணமுரையீரே. (௫௨)

அழிவிலாததற் பதந்தனைமைந்தனே யகமுகத்தவர்
சேர்வர், வழிநடப்பர் பராமுகமாயினுன் மலர்ந்தகண்ணி
ருந்தாலும், குழியில்வீழ்வர் காணப்படிவெளிமுகங் கொ
ண்டுகாமிகளானோர், பழிதரும்பிற விக்கடலழுந்துவர் பர
கதியடையாரே. (௫௩)

சிறந்தநன்மையுந் தீமையுமீசனார் செய்விக்குஞ்செய லன்றோ, பிறந்தசீவர்க ளென்செய்வரவர்கண்மேற் பிழை சொலும் வழியேதோ, துறந்ததேசிக மூர்த்தியேயென்றி டிற் சுருதிநூற் பொருண்மார்க்கம், மறந்தமூடர்கள் வச னிக்கும் பிராந்திகாண் மைந்தனேயதுகேளாய். (௫௪)

திகழ்ந்தவீசனார் சிருட்டியுஞ்சீவனார் சிருட்டியும்வெ வ்வேறே, சகந்தனிற்பொது வீசனார்சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம், அகந்தையாமபிமானங்கள் கோபங்க ளாசைக ளிவையெல்லாம், இகழ்ந்தசீவனார் சிருட்டிகளா குங்கா ணீசனார்செயலன்றே. (௫௫)

மூவராம்பரன் சிருட்டிகளுயிர்க்கெலா முத்திசாத னமாகும், சீவனார்செயுஞ் சிருட்டிகடங்களைச் செனிப்பி க்கும்பிணியாகும், தாவராதிகணசித்திடி லொருவர்க்குஞ் சனனங்கணசியாவாங், கோபமாதிகணசித்திடிற் பந்தமா ங் கொடும்பிறவிகள்போமே. (௫௬)

ஈசர்காரியம் பிரளயத்தொழியவு மெவர்பவமொழி ந்தார்கள், தேசகாலதே காதிகளிருக்கவுஞ் சீவகாரியமோ கம், நாசமாக்கிய விவேகத்தினுயிரொடு ஞானமுத்தர்க ளானார், பாசமோகங்கள் பசுக்களின்செயலன்றிப் பசுபதி செயலன்றே. (௫௭)

அச்சுவத்தமென் றொருமரமதிலிரண் டரும்பறவை கள்வாழும், நச்சுமங்கொரு பறவையம்மரக்கனி நன்று நன்றெனத்தின்னும், மெச்சுமங்கொரு பறவைதின் றதெ

னவியங்கியப்பொருளாக, வைச்சுமாமறை சிவனையீசனை வகுத்தவாறறிவாயே. (ருஅ)

இந்தச்சீவனால் வருமறுபகையெலா மிவன்செயலெ ன்னாமல், அந்தத்தேவனால் வருமென்றமூடர்க ளதோகெ தியடைவார்கள், இந்தச்சீவனால் வருமறுபகையெலா மி வன்செயலல்லாமல், அந்தத்தேவனா லன்றெனும்விவேகிக ளமலவீடைடைவாரே. (ருகூ)

நலமெய்மையயனே யெல்லவர்க்குந்தெய்வ நாயகன் பொதுவானால், சிலரைவாழ்வித்தல் சிலரொடுகோபித்தல் செய்வதேனென்றாயேல், குலவுமக்களைத் தந்தைபோற்சி ட்டரைக் குளிர்ந்துதுட்டரைக்காய்வன், கலைகணல்வழி வரச்செயுந்தண்டமுங் கருணையென்றறிவாயே. (சுo)

மனைவிலங்கறு மைந்தனேகற்பக மரங்கனல்புனன் மூன்றும், தனையடைந்தவர் வறுமையுஞ்சீதமுந் தாகமுந் தவிர்த்தாலும், அனையவீசனு மடைந்தவர்க்கருள்செய்வ னகன்றவர்க்கருள்செய்யான், இனையகுற்றங்க ளெவர்குற் றமாகுமென் றெண்ணிநீயறிவாயே. (சுக)

ஒன்றுகேண்மகனேபுமான்முயற்சியா லுரைத்துமா நுடர்க்கீசன், நன்றுசெய்யவே காட்டியநூல்வழி நடந்து நல்லவர்பின்னே, சென்றுதுட்டவா தனைவிட்டு விவேகரா ய்ச் செனித்தமாயையைத்தள்ளி, நின்றுஞானத்தையடை ந்தவர் பவங்கள்போ நிச்சயமிதுதானே. (சுஉ)

இந்தஞானந்தான் வருவதெப்படியெனி லிடைவிடா விசாரத்தால், வந்தடைந்திடும் விசாரந்தா னேதெனின் மனுதியாஞ் சரீரத்தில், இந்தநானெவன் சித்தெதுசடமெது விரண்டுமொன்றுக்கூடும், பந்தமேதுவிடேதெனவுசாவுதல் பகர்விசாரமதாகும். (௬௩)

போனசன்மங்க டமிலநுட்டித்தநற் புண்ணியபரிபாகம், ஞானமாக்குமே விசாரமேனென்றிடி னுமுரைத்திடக்கேளாய், ஆனபுண்ணிய மீசுரார்ப்பணஞ்செயி னசுசிபோஞ்சுசியாகும், மானதம்பினை விசாரித்துஞானத்தை மருவுமென்றறிவாயே. (௬௪)

பத்தியும்வயி ராக்கியமும்பர லோகமுமணிமாதி,சித்தியுந்தவ நிட்டையும்யோகமுந் தியானமுஞ்சாரூப, முத்தியுந்தரும் விசித்திரகருமங்கண் மோகமாத்திரந்தள்ளும், புத்திதந்திட லருமையோ விசாரமேன் புண்ணியகுருமூர்த்தி. (௬௫)

வேடமாறிய பேர்களையறியவே வேண்டினுன்மகனே கேள், கூடமாமவர் சுபாவங்கள்சீலங்கள் குறிகளாய்ந்தறியாமல், ஓடியுங்குதித் துந்தலைகீழ்நின்று முயர்ந்தகம்பத்தேறி, ஆடியும்பலகருமங்கள்செய்யினு மவருண்மைதெரியாதே. (௬௬)

இன்னவாறந்தப் பிரமத்தையறிவிக்கு மிலக்கணத்தால்வேதம், சொன்னஞானமும் விசாரத்தால்வருமன்றிச்சுருதிநூல் படித்தாலும், அன்னதானங்க டவங்கண்மங்

திரங்க ளாசாரங்கள்யாகங்கள், என்னசெய்யினுந்தன்னை த்தா னறிகின்ற திவைகளால்வாராதே. (௬எ)

துளங்குதர்ப்பண மழுக்கறக் கைக்கொண்டு துலக்கி னூற்போமன்றி, விளங்குபுத்தியா னுலகிலார் துலக்கினுர் விமலதேசிகமூர்த்தி, களங்கமாகுமஞ் ஞானமுமப்படிக் கருமத்தாற்கழுவாமல், உளங்குறித்த ஞானத்தினலெப் படி யொழியுமீதருள்வீரே. (௬அ)

தர்ப்பணத்தினிற் களிம்புவாஸ்தவமலஞ் சகசமாத லின்மைந்தா, கற்பளிங்கினிற் கருநிறஞ்சகசமாக் கறுத்த ன்றுரோபம், தர்ப்பணத்தினி லழுக்கறவேண்டினுற் சாத னத்தொழில்வேண்டும், கற்பளிங்கிலாரோபமே கறுப்பெ ன்று கண்டிடமனம்போதும். (௬௬)

இங்குமப்படிச் சச்சிதாநந்தத்தி விடர்சடம்பொய் மூன்றும், தங்குமாயையின் கற்பிதமன்றியே சகசவாஸ்த வமன்றே, பங்கமாகுமஞ்ஞானத்தைக் கருமங்கள் பகை செயாதுறவாக்கும், துங்கஞானமே கருமவஞ்ஞானத்தை ச்சுடுகின்ற நெருப்பாமே. (எ0)

மனைக்குள்வைத்த பண்டங்களைமறந்தவன் வருடநூ றழுதாலும், நினைத்துணர்ந்தபின் கிட்டுமப்படியிந்த நின் மலவான்மாவும், அனர்த்தமானதன் மறதியைக்கெடுத் தத்தன் னறிவினுற்காணுமல், கனத்தகர்மங்க ளூறுகஞ் செய்யினுங் காணுமோகாணுதே. (எக)

நன்மையாங்குரு வேசுகந்தருவது ஞானமேயெனும் வேதம், தன்மபாவமிச்சிரங்களாற்றேவர்க டருவிலங்கு கண்மாந்தர், சென்மமாகுவ சாதியாசாரமே செய்தவஞ் சுகமென்று, கன்மகாண்டத்தில் விதித்ததென் விதித்துள காரணமுரையீரே. (எஉ)

தினமுமண்ணுகர் பிள்ளைநோய்க்கிரங்கியே தீம்பண்ட மெதிர்காட்டிக், கனமருந்துக ளொளித்துவைத் தழைக்கின்ற கருணைநற்றாய்போலே, மனையறங்கள்செய் மகங்கள்செய்நன்றென்று மலர்ந்தவாசகஞ்சொல்லும், நினைவு வேறுகாண் சுவர்க்ககாமிகளந்த நிண்ணயந்தெரியாரே. (எ௩)

போகமாருயிர் கண்டதையுண்பதும் புணர்வதுமியல் பேகாண், ஆகமங்களுஞ் சுபாவத்தைவிதிக்குமோ வத்தனைதெரியாதோ, காகமேகறுத்திடு நெருப்பேசுடு கசந்திடுவேம்பேநீ, வேகவாயுவே யசையெனவொருவரும் விதித்திடல்வேண்டாவே. (எச)

கள்ளுமூனுநீ விரும்பினுன்மகங்கள்செய் காமத்தின் மனதானால், கொள்ளும்பெண்டொடு கலவிசெய் யெனிலிவன் குறையெலாந்தொடானென்றே, தள்ளும்வேதத்தின் சம்மதஞ்சகலமுந் தவிர்வதேகருத்தாகும், விள்ளுமிவ்விதியென்னெனிற்பூருவ நியமமாம்விதியன்றே. (எரு)

மதுவிறைச்சிக ளுண்ணென்றசுருதிபின் மணந்துபாரெனல்பாராய், மிதுனவிச்சையும் புத்திரோற்பத்தியால் விரும்பென்றவிதிபாராய், இதையும்விட்டொழி யதிரயிட்

டிகவந்நிக் கிகழ்ச்சியற்றதும்பாராய், அதையறிந்து கன்மங்களாசைகளொழிந் தாநந்தமடைவாயே. (எசு)

உலகமானவஞ் ஞானமுங்கருமமு முறவென்றவழி கூடும், பலவுமானவஞ் ஞானமுஞானமும் பகையென்பதுளதானல், நிலவிலேமறப் போலவஞ்ஞானமு நிமலஞானத்தோடே, குலவிநின்றிந்தச் சிருட்டிகள்செய்யவுங் கூடுமோகுருமூர்த்தி. (எஎ)

சொரூபஞானமும் விருத்திஞானமுமென்று சோதிஞானமுமிரண்டாம், சொரூபஞானமே விருத்தியின்ஞானமாய்த் தோன்றும்வேறிலைமைந்தா, சொரூபஞானமஞ் ஞானசத்துருவன்று சுழுத்தியிற்கண்டாயே, சொரூபஞானத்தின் மருவுமஞ்ஞானத்தைச் சுடும்விருத்தியின் ஞானம். (எஅ)

துருத்திமாயையைச் சுழுத்தியிற்சுடாததற் சொரூபஞானந்தானே, விருத்திஞானமாய்ச் சுட்டதெப்படியெனில் வெய்யிலாலுலகெங்கும், பரித்தசூரியன் சூரியகாந்தத்திற் பற்றியக்கினியாகி, எரித்தவாறுபோற் சமாதியில் விருத்தியா லெரிக்குமென்றறிவாயே. (எகூ)

அருளுடையனே திரிவிதகரணத்தா லாகியதொழிலெல்லாம், கருமமல்லவோ விருத்திஞானமுமந்தக் கரணகாரியமன்றோ, உரியகர்மமஞ் ஞானத்தைக்கெடுக்குமென்றோதிலாகாதோ, பெரியஞானமென் றதற்கொருபெயரிட்ட பெருமையையுரையீரே. (அ0)

விருத்திஞானமந் தக்கரணத்தொடு விருத்தியாகினு மைந்தா, ஒருத்திமக்களே தங்களிற்பகைக்கின்ற துலகெ ங்குங்கண்டோமே, கருத்தனுகிய புருடதந்திரங்களாங் கருமங்களவைபோல, வருத்தஞானமோ புருடதந்திரம ன்று வஸ்துதந்திரமாமே. (அக)

வருத்தகர்மங்கள் செய்யவுந்தவிரவு மற்ருென்ருக் கவுங்கூடும், மிகுத்தஞானமப் படியன்றுதியானமும் வி வேகஞானமும்வேறே, செகத்திலொன்றையொன் ருவிவ ன்பாவிக்குந் தியானங்கற்பிதயோகம், முகத்தமாக்கண்ட ஞானமேவாஸ்தவ மோகமாய்மயங்காதே. (அஉ)

கண்டறிந்ததுஞா னங்கேட்டதுதனைக் கருதுபாவ னையோகம், கண்டபேர்சொலக் கேட்டதுமறந்துபோங் கண்டதுமறவாதே, கண்டவஸ்துமெய் தியானவஸ்துக் கள்பொய் கறுவியஞ்ஞானத்தைக், கண்டவக்கணங்கொ ல்வதுஞானமே கருமமன்றறிவாயே. (அந)

சருவமுத்தியைத் தருகின்றதியானமுஞ் சத்தியமன் றென்ருல், சருவமுத்தியுஞ் சத்தியமன்றென்று சங்கியா தேநீகேள், உருவங்கேட்டவன் றியானிக்கும்பொழுதில வ்வுருவம்வாஸ்தவமன்றே, உருவமாகுமப் பொழுதுகண் ணுற்கண்ட வுருவம்வாஸ்தவமாமே. (அச)

சடமதாகிய தியானமெய்யாகிய சர்வமுத்தியைநல் கும், திடமதானதெப் படியெனிலவரவர் தியானமேபிறப் பாகும், உடலமாசையாற் றியானிக்கிற்றியானித்த வுடல்

களாகுவர்மைந்தா, தொடர்பவங்கெடச் சொரூபமேதியா னிக்கிற் சொரூபமாகுவர்மெய்யே. (அரு)

பிரமரூபத்தைத் தியானித்தபேர்களும் பிரமமாகுவ ரென்றால், நரசரீரமாங் குரவனைவிசாரமேன் ஞானமே னென்னுதே, பரமபாவனை பரோட்சமாம் பின்பந்தப் பரோட்சமேயபரோட்சம், திரவிசாரமா ஞானமாமுத்தி யாந் தீர்வையீதறிவாயே. (அசு)

வீடதாம்பரி பூரணசொரூபத்தில் விருத்திஞானமு ங்கூடிச், சேடமாகின லகண்டமாமநுபவ சித்தியெப்படி யென்றால், சாடிநீர்மண்ணைப்பிரித்ததேற்றம்பொடிதானு மண்ணொடுமாயும், ஊடிஞானமு மறிவிலாமையைக்கெடு த் தொக்கவேகெடுந்தானே. (அஎ)

இந்தநிச்சய முத்தருளநுபவ மிருப்பதெப்படியென் றால், சிந்தையற்ற பூமண்டலவிராசனுஞ் சிசுவும்போற்சுக மாவர், பந்தமுத்திகண் மறந்துபோமுண்டென்று பலர் சொலினகையாவர், அந்தரத்தையுண் டமிழ்ந்ததோர்கொ சுகெனு மவர்களைநகையாரோ. (அஅ)

மலடிமைந்தனுந் தாணுவிற்புருடனும் வான்மலர்முடி சூடி, இலருகந்தர்ப்ப நகரிலேசுத்திகை யிரசதம்விலேபே சிக், கலகமாய்முயற் கொம்பினற்குத்தியே களைத்திருவ ருமாண்டார், அலகையாயின ரெனும்விவகாரத்தை யறிந் தவன்மயங்கானே. (அகூ)

மாயையென்பது பொய்யெனிலதுபெற்ற வகையெ லாம்பொய்யாமே, தாயையன்றிமக் களுக்கொருபிறவியு

ஞ்சாதியும்வேறுண்டோ, சேயசொர்க்கமு நரகமுநன்மை யுந் தீமையும்பாராமல், தூயசத்துச்சித் தாநந்தபூரண சொரூபமாயிருப்பாயே. (சo)

பங்கயாசனன் முதற்பலதேவரும் பாருளபெரியோ ரும், கங்கையாதியாந் தீர்த்தமுந்தேகமுங் காலமுமறை நாலும், அங்கமாறுமந் திரங்களுந்தவங்களு மசத்தியமெ னச்சொன்னால், எங்கணாயக னேயதனாற்குற்ற மில்லையோ மொழியீரே. (சக)

சொற்பனந்தனிற் கண்டதைப்பொய்யென்று சொ ல்வதுபிழையானால், அற்பமாயையிற் றோன்றியசகங்களை யசத்தெனல் பிழையாமே, சொற்பனந்தனிற்கண்டதைப் பொய்யென்று சொல்லலாமெனின்மைந்தா, அற்பமாயை யிற் றோன்றியசகமெலா மசத்தியமெனலாமே. (சஉ)

பொய்யைமெய்யென்றமூடர்புண்ணியரென்று ணங்கூப்பிடுமானால், மெய்யைமெய்யென்ற ஞானி குற்றங்கள் விதித்தசாத்திரமுண்டோ, பொய்யதேய ஞமரூபங்களாம் பூதமாகியமாயை, மெய்யதேதெனிற சச்சிதாநந்தமாய் வியாபிக்குமான்மாவே. (சங)

மாயையென்பதே துடையாரரெப்படி வந்ததுவரு வானேன், மாயையென்பது பிரமத்தின்வேறெனின் வஸ் வுதுமிரண்டாமே, மாயையென்பதும் பிரமமுமொன்றெ னின் வஸ்துவும் பொய்யாமே, மாயையென்ற மேக்ங்களு க் கொருசண்ட மாருதகுருமூர்த்தி. (சச)

அதனையின்னதென் றுரைத்திடப்படாமையா லவாச்சிய வடிவாகும், இதுதனக்குள துடலியானுலகுமெய்யெனுமவருடையோர்கள், கதையிலாதபொய் வந்ததிப்படியென்று கண்டபேரில்லைமைந்தா, விதனமாயையேன் வந்ததென்றுற்புத்தி விசாரமற்றதனாலே. (௬௫)

அருவமாகுமா யாவிவித்தைகள்விளை யாடுமுன்றெரியாவே,உருவமாம்பலகந்தர்ப்பசேனையாயுதித்தபின்வெளியாகும், பிரமசத்திக ளநந்தமாமதைக்கண்டு பிடித்திடல்கூடாதே,பரவுபூதங்கள் கண்டநுமானத்தாற் பலருக்கும்வெளியாமே. (௬௬)

காரியங்களுஞ் சத்தியாதாரமுங் காணுமற்றதுமாயம், பாரினின்றமாயாவியுஞ்சேனையும் பார்ப்பவர்கண்காணும், வீரியந்திகழ் வித்தையாயினசத்தி வெளிப்படாததுபோல, பேரியற்பிர மத்துக்குமுலகுக்கும் பிறிதுசத்திகளுண்டே. (௬௭)

சத்திசத்தனைத் தவிரவேறன்றுகாண் சத்தனுமாயாவி, வித்தைகாட்டிய விந்திரசாலம்பொய் வித்துவான்மெய்போலப், புத்திமைந்ததினேசத்திமானாகிய பூரணவான்மாவின்,வத்துநிர்ணயஞ் சொன்னதிட்டாந்தத்தின் வழிகண்டுதெளிவாயே. (௬௮)

இல்லையாகிய சத்தியையுண்டென்ப தெப்படியெனக்கேட்கில், புல்லையாதியா மசேதனப்பொருளெலாம் பூத்துக்காய்ப்பனபாராய்,நல்லையாமக னேயதிற்சிற்சத்திநடந்

திடாதிருந்தக்கால், தொல்லையாய்வருஞ் சராசரவுயிர்க் கெலாஞ் சுபாவங்கள்வேருமே. (கூகூ)

கருப்பைமுட்டையுட் பறவைகள்பலநிறங் கலந்தசித் திரம்பாராய்,அருப்பமாஞ்சத்தி நியமமில்லாவிடிலரசிலா நகர்போலாம்,நெருப்புநீரதாங் கசப்புமேமதுரமா நீசனு மறையோதும், பொருப்புமேகமாங் கடலெலாமண்களாம் புவனமிப்படிப்போமே. (க00)

ஆர்க்குங்காணவு மறியவும்படாதென்று மவாச்சிய வடிவென்றும், சேர்க்குநாம ரூபப்பயிர் வித்தென்றுஞ் செப்பியசிற்சத்தி, பேர்க்குமாறெங்ஙன் பிறித்திடப்படா தெனிற் பிரமபாவனையொன்ருப், பார்க்குமாறெங்ஙன்மு த்தியாகுவதெங்ஙன் பரமசற்குருமூர்த்தி. (க0க)

வாயுத்தம்பனஞ் சலத்தம்பனம் மணிமந்திரமருந் தாலே, தேயுத்தம்பனஞ் செய்திடிலதிலதிற் சிறந்தசத்தி களெங்கே, நீயச்சச்சிதாநந்தமாய் வேறென்று நினைந் திடாதிருப்பாயேல், மாயச்சத்திபோ மீதன்றிமந்திரமறை களிற்காணேமே. (க0உ)

மேவுமண்ணிலவ் வியத்தமேவியத்தமாம் விவகரித்தி டவேண்டில், நாவினுன்மண்ணைக் குடமென்பரக்குட நசி ப்பதுநாவாலே, பாவுநாமரூ பங்களைமறந்துமண் பார்ப்ப தேபரமார்த்தம்,சீவபேதகற் பிதங்களைமறந்துநீ சின்மய மாவாயே. (க0௩)

பூரிக்குங்கன சச்சிதாநந்தத்திற் பொய்சடந்துயர்மூ ன்றும், தூரத்தாயினுந் தோன்றுபாழ்விபரிதந் துடைப்

படதெப்படியென்றால், நீரிற்றோன்றுந்தன் னிழறலைகீழதா
ய் நின்றலையினுநேராய்ப், பாரிற்றோன்றிய தன்னைநோக்கி
டிலந்தப் பாழ்நிழல்பொய்யாமே. (க0ச)

ஞானங்காரண மறிபொருள்காரிய நாமரூபப்பேய்
கள், ஆனதெப்படி யழிந்ததெப்படியென வாய்குதல்பல
னன்றே, மானமைந்தனே தீர்க்கசொப்பனசகம் வந்தநும்
பாராமல், போனதும்கினை யாமனுன்போதமாய்ப் பூர்ண
ல்மாயிருப்பாயே. (க0ரு)

அசத்திலெம்மட்டுண் டம்மட்டும்பராமுக மாகினால
ம்மட்டும், நிசத்திலுள்விழிப் பார்வையாமிப்படி நிரந்தரப்
பழக்கத்தால், வசத்திலுன்மன நின்றுசின்மாத்திர வடிவ
மாயிடின்மைந்தா, கசத்ததேகத்தி லிருக்கினுமாநந்தக் கட
வடிவாவாயே. (க0சு)

வேறு.

தானன்றிவேறொன்று மில்லாதபூரணச் சச்சிதானந்
தகுணமாய், ஊனின்றவுயிர்தோறு மொன்றாகுமென்று
லதை தொக்கின்றபடி கண்டிலேன், நானென்றசீவன்கள்
சத்தான வகையொக்கு ஞானங்கள் வெளிகண்டதால்,
ஆநந்தமிதுபோல வெளியாகவுதியாத வடைவேது குரு
நாதனே. (க0எ)

உருவங்களிரதங்கள் பரிசங்களொருபூவி லொன்று
குமென்றாலுமே, கரணங்களோரொன்றி லோரொன்று
தெரியுங்கணக்கன்றிவாராதுகாண், அருமந்தசச்சிதானந்

தச்சுபாவங்க ளான்மாவின்வடிவாகிலும், பிரபஞ்சமய மாம் விருத்திபேதத்தினாற் பேதங்களாமைந்தனே.(௧௦௮)

தாமதமிராசதஞ் சாத்துவிதமுக்குணத் தால்வரும் விருத்திமூன்றும், ஆமவைகண்டமுங் கோரமுஞ்சாந்த முமபிதானமாகுமகனே, ஏமுறவிருக்கின்ற சச்சிதானந் தங்க ளென்றென்றுமொன்றாகிலும், நாமுனைக்கும்விருத் திப்பிரிவினாற்சொருப ஞானதிபிரிவாகுமே. (௧௦௯)

சடமூனமூடத்த ருக்கல்லுமண்களிற் சத்தொன்று மேதோன்றுமால், விடமானகாமாதி கோரத்திலாநந்தம் விளையாதுமற்றவைகளாம், திடமானவொழிவாதி சாந்தத் திலேசச்சி தானந்தமூன்றும்வெளியாம், மடமானமூடங் கள் கோரங்கள்விடுசாந்த மனமாகிலாநந்தமே. (௧௧௦)

இகமானகுருநாதனே சச்சிதானந்த மெனுமிலக்கண மறிகிலேன், அகலாதசத்தாவ தேதுசித்தாவதே தாநந் தமேதென்றிடில்,மிகுகாலமூன்றுங்கெடாதிருப்பதுசத்து வேறுபாடறிதல்சித்தாம், மகிழ்காமநுகர்போது சுகமாகு மநுபூதி வாழ்வென்பதாநந்தமே. (௧௧௧)

நாசச்சரீரத் திருக்குஞ்சரீரிதனை நால்வேதமாவாக்கி யம், நீசச்சிதாநந்த மென்றிடினுமாசிரியர் நீபிரமமாகுமெ னினும், மாசற்றசச்சிதா நந்தநானென்னவிவன் மன்னு மநுபவமெங்ஙனே, கோசப்புரங்களை யிடித்துத்தகர்க்கு மத குஞ்சரக்குருநாதனே. (௧௧௨)

சென்மாந்தரஞ்செய்த வினைகளுடறருமெனிற் செல் காலமிவீனுண்டலோ, கன்மாநுபவநரக சொர்க்கமெனில்

வருகின்ற காலத்துமிவனுண்டலோ, உன்மாதயாதனுவுட ல்கடவுளுடன்மநுட வுடன்மாறிமாறியழியும், தன்மாய வுடல்கெடினு மிவனிருப்பதுகொண்டு சத்தென்பதொக்கு மகனே. (ககங)

இருளாகமூடுஞ் சுழுத்தியிலிராத்திரியி லிரவிசுடர ற்றபொழுது, மருளாமலிருளையும் பொருளையுந்தெரிகி ன்ற வகைகொண்டு சித்தாகுமே, பெருவாழ்வு மிக்கதா னேதன்னிடத்தினிற் பேராதபிரியமதனல், அருகாதபிரிய ஞ் சுகத்தில்வருமாதலா லாநந்தமாமைந்தனே. (ககச)

அன்னபானுதிசுக சாதனமதாகையா லார்க்கும்வெகு பிரியமாகும், இன்னவாறுன்மாவு மாநந்தசாதன மெனக் கருதல்பொருளல்லவே, சொன்னவான்மாவையொரு சுக சாதனங்களொடு சொல்லுவாயாகின்மகனே, உன்னதா நந்தம்வே றேதநுபவிப்பதா ருபயவான்மாவுமுளவோ.()

விடயசுகமதில்வருதல் பிரியமாத்திரமாகும் வெகு பிரியமான்மாவிலாம், விடயசுகம்வருபிரிய மாறிவருமான் மாவில் வெகுபிரியமாறுதுகாண், விடயசுகம்விடலுமாங் கொளலுமாமான்மாவை விடுவதெவர்கொள்வதெவர்பார், விடயசுகபோகங்கள் விடுமவனையவனல்விடப்படாதொரு நாளுமே. (ககசு)

வேகின்றகோபங்க ளாலென்னைநான்கொன்று விடு கிறேனென்றுசிலபேர், சாகின்றபடியினுற் றன்னையே தான்கொன்று சாவனெனல் சங்கையலவே, தேகந்தனைக் கொல்லு மவனல்விடப்பட்ட தேகமவனல்லன்மகனே,

ஆகந்தனிற்கோப மலதுதளையொருநாளு மான்மாவெறு
ப்பதிலையே. (௧௧௭)

தாகப்படும்பொருளி லும்மகன்பிரியமாந் தனயனி
லுமுடல்பிரியமாம், ஆகத்திலும்பிரிய மிந்திரியமாங்கரண
மதனிலும் பிரியமுயிராம், ஏகப்பிராணனிலும் வெகுபிரிய
மான்மாவி லிந்தவான்மாமுக்கியம், ஊகத்தினுற்கௌண
மித்தைகர்த்தாமூன்று மோரொன்றிலதிகமகனே.(௧௧௮)

கெடலான பொழுதிவன் காணிக்கு மகனுன கௌ
ணவான்மாமுக்கியம், விடலாதவுடலம் பரிக்குநா னுடலா
னமித்தையான் மாமுக்கியம், திடமானநன்மைகதி வேண்
டினுற்கர்த்தனுஞ் சீவவான்மாமுக்கியம், சடமாயுமுத்தியி
னின் ஞானவான்மாவான தானேமகாமுக்கியம். (௧௧௯)

புலியுமநுகூலமெனி லிட்டமாம்பகைசெயிற் புதல்வ
னெனினும்வெறுப்பாம், உலகிலிருவகையுமல் லாதபுல்லா
தியிலு தாசீனமாமாதலான், மலினமறுசின்மயன் பலவ
கையுமிப்படி மகிழ்ச்சியில் விருப்பமிகழான், அலகிலாநந்
தவடி வாகுமுன் சொரூபத்தை யாராய்ந்து பார்மைந்
தனே. (௧௨௦)

மானஞ்சிறந்த குருநாதனே யாநந்த வகைகளைத்
தனையென்னிலோ, ஞானந்திகழ்ந்த பிரமாநந்தம் வாசனு
நந்தம்விட யாநந்தமென், றுநந்தமூன்றுவித மெட்டுவகை
யென்பர்சில ரவ்வைந்துமிதிலடக்கம், யானந்த வகைசொ
லக் கேண்மைந்தனேயெட்டு மிஃதின்ன தின்னதெனவே.

போகத்தில்வருசுகம் விடயசுகநித்திரைப் போதுள துபிரமசுகமாம், மோகத்தனந்தலிற் சுகம்வாசனைச் சுக முழுப்பிரியமான்மசுகமாம், யோகத்திலுளது முக்கியசுக முதாசீனமுற்றசுக நிசசுகமதாம், ஏகத்தைநோக்க லத்து விதசுகம்வாக்கிய மெழுந்தசுகஞானசுகமே. (கஉஉ.)

வேறு.

இவ்வாறுரைசெயுஞ் சுகபேதங்களி னியல்பாமவை சொலமகனேகேள், ஒவ்வாநனவினி லுழல்வாணிடர்கெட வுறங்குஞ் சயனமது றநேரம், செவ்வாமனமகமுகமாமதி லொளிர் சித்தின்சுகநிழல்சேருங்காண், அவ்வாறிவனுள மகிழ்வாமநுபவ மதுதான்விஷயசுகாநந்தம். (கஉ௩)

ஈனந்தருசுகவிடயந்திரிபுடி யிடராமெனமன மசை யாமல், சேனந்தனதுகுலாயந்தனில்விழு செயல்போனித் திரைசெறிசீவன், தானந்தமில்பர னுடனென்றவனொரு தனையல்லதுபிறநினையாமல், ஆநந்தமயனு மாவன்சுகமிகு மதுதானுயர்பிரமாநந்தம். (கஉச)

தூங்குஞ்சுகமது பிரமச்சுகமெனல் சுருதிப்பொருள் விழிதுயில்வோர்கள், தாங்கும்மலரணை நன்றுகச்சிலர்சம் பாதிப்பதுதானாகம், தீங்குந்நன்மையுமாண்பெண் முறை மையுந்தெரியாதமளிசெய் பொழுதேபோல், ஆங்குள்வெ ளிகளு மறியாவநுபவ மதனாலதுபிரமாநந்தம். (கஉரு)

உதவும்புவியினி லொருவன்னநுபவ மொருவன் மன தினிலுதியாதே, மதியுங்கெடுகிற துயில்கொண்டாநந்த மயனன்றோ சுகமுறுகின்றான், இதுவிஞ்ஞான மயனுஞ்

சிந்தையி னினைவாய்வந்திடலழகன்றே, சுதைவிண்ணோர் புகழ் குருவேநீரிது சொல்லீர்சகலமும் வல்லீரே. (கஉசு)

நெய்யும்வெண்ணெயு மிருபேர்களுமறி நினைவிற்பிறிவறிவினிலில்லை, செய்யுந்நனவினி லிறுகும்மனதொடு சேருஞ்சின்மயவிஞ்ஞானன், தையுந்துயர்மன நழுவும்பொழுதுணர் ஞானச்சுகமுணுமாநந்தன், பெய்யுந்துளிகளு நீருங்குளமொடு பாகும்போலிவர்பிறிவன்றே. (கஉஎ)

ஒன்றாகியபிர மாநந்தச்சுக மொழிவானேன் வெளிவருவானேன், என்றான்முன்செய்த கருமம்வெளியினி விழுக்குஞ்சுழுத்திவிட் டெழுந்தோனும், நன்றாயினசுகமகலான்வெளியிலு நடவான்மறதியும் பெறமாட்டான், அன்றாமெனவிருந்துறங்குஞ்சிலகண மதுவேவாதனையாநந்தம்.

அந்தக்கணமுட லகமென்றிடர்களி லலைந்தேசுகந்தனைமறந்தேபோம், முந்தைச்செயும்வினை சுகதுக்கந்தருமோனந்தருநடு வடிவேகாண், எந்தப்புருடனு மொருசிந்தையுமற விருந்தேனெனலநுபவமாகும், இந்தப்படிதனுதாசீனச்சுக மிதுவே நிசமெனுமாநந்தம். (கஉகூ)

நிசமானதுமுக் கியமோகுடத்துள நீரன்றேவெளியீரந்தான், வசமாவகங்கர மறைந்தானிசமது படிந்தான்முக்கியவகையாகும், திசையார்திரிசய மறியாதேதுயில் செறியாதோட்டறிபோலே, அசையாதேமதி சமமாகிய நிலை யதுதான்முக்கியவாநந்தம். (கங0)

மனுடன்மனுடகந் தருவன்றேவருநன் மாகந்தருவனெண்பிதிரோடே, பனுமாஜானர்கள் கருமத்தேவர்கள் பகர்

முக்கியரிந்திரனுசான், கனமார்பிரஜாபதியன் விராட்டு பொன் கர்ப்பப்பிரமனென்றின்னோர்கள், பினவாநந்தங் கணுவாயாம்பிரளய வெள்ளக்கடல் பிரமாநந்தம்.(௧௩௧)

எவனுகிலுமிந்தத்துரியாதீதத்தி லேழாம்பூமியி லிருந்தானேல், அவனுரதன்சுகன்சிவன்மாலயன்முதலறிவோரநுபவ சுகபோதம், விவகாரதிர்சய மிதுவேயநுபவமென முன்சொல்லியவிவகாரி, உவமானமுமறி மகனேயவனடியுதிரும்பொடிகளென் முடிமேலே. (௧௩௨)

### வேறு.

இந்தவா றைந்துசுகஞ் சொல்லினேம் வித்தைசுக மினிமேற் சொல்வோம், முந்தமாயையுஞ் சச்சிதாநந்தப் பொருளுமே மொழியும்போதில், அந்தமா வத்துவித சுக மான்மசுகமிரண்டு மங்கேசொன்னேம், தொந்தமாற்றிய மகனேயின்னமுனக் கையமுண்டேற் சொல்லுவாயே.

குகன்றனையுமெனையுமுல கினையுமீன்றளித்தருளுங் குருவேகேளீர், புகன்றசச்சிதாநந்தப் பதங்கடனித் தனியாகிப் பொருள்வேறுனல், உகண்டமனமுறைப்பதெந்ந ன்பரியாயபதங்களைப்போ லுறவுகாணேன், அகண்டமாயொருசுவையாய்த் தேனீக்கூட்டியமதுவாவறிவிப்பீரே.

குளிரிளகல்வெண்மையென்றபதங்களினுனீர்மூன்று கூருயிற்றே, ஒளிதவனஞ்செம்மையென்றபதங்களா லக்கினியு மொருமூன்றமோ, வெளிமுதலாஞ்சகமசத்துமூடமிடரெனப்பிரித்து விலக்கிவேதம், எளிதறியமுர்ண்மொழிந்த சத்தாதியெனும்பிரம மேகந்தானே. (௧௩௫)

நித்தியம்பூரணமேகம் பரமார்த்தம் பரப்பிரம நிதானஞ்சாந்தம், சத்தியங்கே வலந்துரியஞ் சமந்திருக்குக் கூடஸ்தன் சாட்சிபோதம், சுத்தமிலக்கியஞ்சநா தனஞ் சிவன் றத்துவம்விண்சோதியான்மா, முத்தம்விபு சூக்குமமென்றிவ்வண்ணம் விதிகுணங்கண் மொழியும்வேதம். ()

அசலநிரஞ்சனமமிர்த மப்பிரமேயம்விமலம் வசனுதீதம்
அசடமநாமயமசங்க மதுலநிரந்தரமகோ சரமகண்டம்
அசமநந்தமவிநாசி நிர்க்குணநிட்களநிரவ யவமநாதி
அசரீரமவிகார மத்துவிதமெனவிலக்கா மநேகமுண்டே.

இன்னவகை விதிவிலக்குக்குணங்கணன்ருய்ச் சேர்ந்தொருமித்தெல்லாங்கூடிச், சொன்னபொருளொன்றன்றி யிரண்டில்லையொருபொருளைச்சொல்லுஞ்சொற்கள், பின்னபதமாமதனுற் சத்தாதிகுணப்பொருளாம் பிரமமேகம், அன்னபொரு ளொருமையறிந் தகண்டபரிபூரணமா யாவாய்நீயே. (கரு௲அ)

நிற்குணவத் துவின்குணங்க ளுரைப்பதுதாய் மலடியென நிகரென்னுதே, சற்குணனே வத்துநிலை யுனையாமலறியவல்ல சதுரருண்டோ, நற்குணவே தங்களிந்தச் சீவன்முத்தி பெறப்பிரம ஞானந்தோன்றச், சொற்குணங்கள்பிரமத்தின் குணங்களன்று பிரமமாஞ் சொரூபந்தானே. (கரு௲கூ)

மோகவிருள் கெடக்கோடி யருணனெனவருகுருவே மொழியக்கேளீர், ஏகபரிபூரணமா மென்சொருபமென் னுளத்திலிருக்கும்வண்ணம், ஆகமங்கள்சொன்னபடியென்

னையகண்டார்த்தமா வறிந்தேனையா, ஊகமுமொத்திடவு
ைத்தாற் பசுமரத்திலாணிபோலுறைக்குநெஞ்சே. (க௪0)

சத்தேசித்தாகுமய லெனிலசத்தா மசத்தானாற் சா
ட்சியெங்கே, சித்தேசத்தாகுமய லெனிற்சடமாஞ்சடங்க
ளுக்குத் திதியுமில்லை, ஒத்தேதோன் றியசத்துஞ் சித்து
நல்லசுகமாகு மேகத்துக்கோர், வித்தேயன்னியமாகிற் சட
மசத்தாஞ் சுகாநுபவம் விளைந்திடாதே. (க௪க)

வீயாதசத்துமுன்னம் விளங்குவது தன்னிலோ வே
றென்றாலோ, வாயால்வேறெனிலதுவு மசத்தோசத்தோ
வசத்தேன்மலடிமைந்தன், பேயாகாரியஞ்செயுமோ சத்
தெனவிப் படியதையும் பிரித்துச்சொன்னால், ஓயாதவவத்
தையாங் குதர்க்கவிகற்பங்களை விட்டொழிந்திடாயே. ()

சுருதியுத்தி யொத்ததுபோலநுபவமுங் கேள்சுழுத்
திச்சுகவாநந்தம், மிருதிவடிவாதலிலவ்வாநந்த வேயறிவாம்
வேறங்கில்லை, கருதுபிரளயஞ்சுழுத்தி யிரண்டினுநீ யிருந்
திருளைக்காண்கின்றாயே, இருதயத்திப்படிநோக்கி யேகப
ரிபூரணமா யிருந்திடாயே. (க௪௩)

பலகலையுமுணர்ந்தகுரு மொழிந்தபடி யிவனுமநுப
வம்விடாமல், பலமலரின்மதுப்போல சச்சிதாநந்தமொன்
றாம்பரமார்த்தத்தைப், பலபொழுதுங்கண்மூடிச் சமாதி
யிருந்தான் விழித்துப்பார்த்தபோது, பலவடிவாஞ்சரா
சரசித்திரங்களெலாந் தோன்றுமொருபடமானானே. ()

இதயமொத்தசற்குருவே நமக்கிதுவே விநோதமின்
றியினிவேறுண்டோ, அதையுரைத்துமதைநினைத்துமிரு

ப்பதன்றோ ஞானிகளுக்கானநீதி, முதலுரைத்ததுரியாதீ தமுமேமாம் பூமிபுமுக்கியமாமென்ற, பதமுமதின்வகையு மெனக்கெளிதாகத் தெளியும்வண்ணம் படித்திடீரோ. ()

வினவுமிடத்தஞ்ஞான பூமிகளேழ் ஞானபூமிகளே ழென்பார், இனியவற்றுளஞ்ஞான பூமிகளேழையுமுந்தி யியம்பக்கேளாய், தனிவித்துச்சாக்கிரஞ்சாக்கிரமகாசாக் கிரஞ்சாக்கிரத்தைச்சார்ந்த, கனவுகனுக் கனவுசாக்கிரஞ் சுழுத்தி யென்றெழுபேர் கணித்தார் மேலோர். (கசசு)

முந்தவகண்டத்தெழுமோ ரறிவுமாத்திரமது தான் முதல்வித்தாகும், இந்தவறிவிற்பண்டில் லாவகந்தைமுனீ போலா மிதுநனுவாம், வந்துவந்துபிறவிதொறுமகமமதை வளருமதுமகாநனுவாம், நந்துமகங்கொடுநனவின் மனோ ராச்சியஞ்செயலே நனுக்கனுவே. (கசஎ)

உண்டுறங்கிகனோராச்சி யஞ்செயல்சொப் பனமெ னும்பே ருடையதாகும், பண்டுகனுக் கண்டுமறந் ததைமீ ண்டுநினைப்பதுசொப்பனநனுவாம், மண்டுமிருண்மூடிவது சுழுத்தியாமஞ்ஞான வகைகள்சொன்னோம், விண்டுநிறை முத்திதரு ஞானபூமிகளேழும் விளம்பக்கேளாய்.(கசஅ)

புலவர்புகழ்முதற்பூமி சுபேச்சைவிசா ரணையிரண் டாம்பூமியாகும், நலதநுமானசிமூன்றும் பூமிசத்துவாப த்தி நாலாம்பூமி, சொலுமசம்சத்திப்பேரும் பதார்த்தா பாவனைப்பேருந் துரியப்பேரும், மலினமறுமகனேயைந் தாறேழுபூமிகளா வகுத்தார்மேலோர். (கசகூ)

துற்சங்க நிவிர்த்திவந்து சிவஞானம் விரும்புவது சுபேச்சையாகும், நற்சங்கமொழிவினவி ஞானநூல்பழகல்விசா ரணையாநம்பி, முற்சங்கவேடணைகள் விடறநுமானசியிந்த மூன்றினாலும், சற்சங்கமனதிலுண்மை யறிவுதித்தல் சத்துவாபத்திதானே. (கருo)

தத்துவத்தின் மனமுறைத்து மித்தையெலாமறத்தலசம் சத்தியாகும், அத்துவிதாநந்தம்வருந் திரிபுடிபோம் பதார்த்தாபாவனையதாகும், வத்துநிலையிருந்தபடி யிருந்தமவுனசுபாவந் துரியமாகும், இத்துரிய பூமியைமுன் றுரியாதீதப்பதமென் றதுவுங்கேளாய். (கருக)

முற்புவிமூன் றினுமுலகந் தோன்றுதலாற்சாக்கிரமாமூன் றற்கப்பால், சொற்பனமாமதுவுமெள்ள நழுவுமைந்தாம்பூமியே சுழுத்தியாகும், அற்புதமாஞ்சுகாநுபவ மிகுமாறும்புவிதுரிய மதற்கப்பாலோர், கற்பனையிலாதவிடமதீதமென் றுமௌனமாக் காட்டும்வேதம். (கருஉ)

துரியநிலந்தனைத்துரியா தீதமெனின்மயக்கமென்றுகருதிமேலோர், அரியதொருவிதேகமுத்தி யதீதமென்பாரதுகணக்கிலாறும்பூமி, மருவுசுழுத்தியிற்காட்சி சுழுத்தியென்பாரென்பதுநீ மனத்திற்கொள்வாய், பெருமைதருஞானபூமியின்விகற்ப மின்னமுண்டு பேசக்கேளாய். ()

முன்னிலங்களேறியமூ வருமப்பியாசிகளா முத்தரல்லர், பின்னிலங்கள்வரன்வரியான் வரிட்டனெனுஞ் சீவன்முத்தர்பேதமாகும், சொன்னநடுப்பூமிவந்தஞானிகளே

பிரமவித்தாங் தூயமுத்தர், இன்னமுமப்பூமிகளின் பெரு மைதனைநீயறிய யான்சொல்வேனே. (கருச)

நாலாம்பூமியில்வருமுன் மூன்றுபூமியுமடைந்து நட ந்துமாண்டோர், மேலானபதமடைந்து பிறந்துமெள்ள மெள்ளவந்து வீடுசேர்வார், மாலானபவத்தில்விழார் முத ற்பூமிகிடைப்பதுவே வருத்தமைந்தா, காலானமுதற்பூமி கைவந்தான் முத்தியுங்கைவந்ததாமே. (கருரு)

இப்புவியிலிஞ்ஞான பூமியொன்றி லிரண்டிலடைந் திருந்தாரானல், அப்புருடர்மிலேச்சரா கிலுமுத்தர்குரு பாதத் தாணைமெய்யே, தப்புரையென்றவர்கெடுவார் நடு வானமறைகளைநீ சங்கியாதே, செப்புமொழி வழிதிடமா யகம்பிரமமென்றிருந்து தெளிந்திடாயே. (கருசு)

பொல்லாதமிலேச்சருக்கும் விதேகமுத்தி தருஞான பூமியென்று, நெல்லாகிமுளைக்குமெனைத் தண்டுலமாக்கிய குருவே நீர்சொன்னீரோ, இல்லாளுங்குடும்பம்விட்டுச் சந் நியாசம்புகுந்தேகாங்கியானோர், அல்லாமன் முத்திபெறு ரென்றுசிலர் சொலுமயக்க மகற்றுவீரோ. (கருஎ)

சிட்டர்புகழ்மகனேநீ சங்கித்தசங்கைநன்று தெரிய க்கேளாய், கட்டழியுந்துறவுநால் வகையாகுமவைகளுக் கங் காகும்பேர்கள், பட்டதுயர்கெடுங்குடீசகம்வெகூதக மஞ்சம் பரமவஞ்சம், விட்டகலுந்துறவுக்கு விராகங்கார ணமன்றி வேடமன்றே. (கருஅ)

மந்தமுந்தீவிரமுந்தீ விரதரமுமெனமூன்று வகைவி ராகம், வெந்துயரம்வரும்பொழுது குடும்பத்தை வெறுத்

துவரும் விராகமந்தம், இந்தவுடலளவுமனே தனம்வேண்டா மெனவிடறீ விரமென்பார்கள், அந்தணனூர்மித்தை யென விடலதுதீவிரதரமா மறிந்திடாயே. (கருஐ)

பாவிமந்தவிராகத்திற் சந்நியாசங்களொன்றும் பலித்திடாதே, தீவிரத்திற்குடீசகமும் வெகூதகமுமென்றிரண்டு திறங்களுண்டாம், தாவிநடந்திடத்திடமிலாதவர்க்குக்குடீசகமுஞ் சகங்களெங்கும், மேவிநடந்திடத்திடமுள்ளவர்க்குவெகூதகமுமென விதித்தார்மேலோர். ()

இருவகைதீவிரதரத்து மஞ்சனென்றும் பரமாஞ்சனென்றுஞ்சொல்வர், வருமஞ்சனுக்குமுத்தி சத்தியலோகத்தன்றி வாராதென்பார், பரமாஞ்சனுக்குமுத்தி யிவ்வுலகின்ஞானத்தாற் பலிக்குமென்பார், திரமருவும்பரமாஞ்சன் முனுமிருவகையாகுஞ் செப்பக்கேளாய். (கசுக)

சிஞ்ஞாசுஞானவானென்றிரண்டுபேர்களவரிற்சிஞ்ஞாசு, மெய்ஞ்ஞான பூமியின்முன் மூன்றுபூமியுணடக்கும் விவேகியானோன், சுஞ்ஞானவானென்போன் சீவன்முத்தியடைந்திருக்குந் தூயமேலோன், அஞ்ஞானமகனுமந்தச் சிஞ்ஞாசுமிருவகையா மதுவுங்கேளாய். (கசுஉ)

பந்தமனே துறந்துசில ரதிதிகளாயிருந்தடைவர் பரமஞானம், அந்தணர்மன்னவர்வணிகர் சூத்திரராயிருந்துசில ரடைவர்ஞானம், இந்தவகைச்சாத்திரத்து முலகத்துநடப்பதுகண் டிருந்துமைந்தா, சிந்தனையின்மயக்கமென்னே சுருதியுத்தியநுபவத்தாற் றெளிந்திடாயே. ()

## வேறு.

பிறந்ததுண்டானாலன்றோ பிறகுசாவதுதானுண்டாம்
பிறந்ததேயில்லையென்னும் பிரமமாவதுவுநானே
பிறந்ததுநானென்றாகிற் பிரமமன்றந்தநானே
பிறந்ததுமிறந்ததற்ற பிரமமானானேநானே. (௧௬௪)

நானென்றபிரமமான நானேநானறியேனென்றால்
நானென்பதேதுபின்னை நம்முடைப்புந்தியென்னில்
தானதுமயக்கந்தன்னிற் சாகுமேசாவாதாகி
நானெனநிறைந்திருந்த ஞானமானானேநானே. (௧௬௫)

நிறைந்தவாறெந்தவாறு நிலைதெரிந்திலனென்றாயேல்
அறிந்ததாஞ்சுழுத்திதன்னி லானந்தமதுவேயாகும்
குறைந்ததற்கானந்தந்தான் குவலயந்தன்னிலில்லை
நிறைந்ததேயிந்தவான்மா நிதானமிவ்வறிவுதானே. ( )

மனத்தினாலெண்ணித்தானே வந்ததிவ்வுலகமாகும்
நினைத்திடிலநேகலோக நிற்பதவ்வறிவிலன்றோ
அனைத்தையுங்கடந்தப்பாலு மந்தமற்றறிவிதாமென்
றெனைத்தனிவிசாரித்திட்டா லேகமாய்நிறைந்தோனானே.

அந்தவாறிருந்துகொண்டே யானந்தமநுபவிக்க
எந்தவாறிருந்துகொண்டா லெனக்கிதுதெரியுமென்னில்
இந்தமூன்றவஸ்தைதம்மு ளெழுந்திடும்விருத்திநீக்கில்
அந்தவாறிருந்துநீயு மானந்தமடையலாமே. (௧௬௮)

வாதனாவசத்தினாலே வருகிறவிருத்தியெல்லாம்
எதினாலடக்கலாகு மென்றுதான்விசாரஞ்செய்யில்

போதமாமிராசன்றனைப் புந்தியைம்புலன்களெல்லாம்
தாதராயிருக்கப்பெற்றாற் சகலமுமடங்குந்தானே. ()

விருத்திகளடக்கவின்னம் விநோதமாம்யோகத்தாலே
துருத்திபோனூதுமூச்சைச் சுகமுடனடக்கினிற்கும்
கருத்ததற்கில்லையென்னிற் காரணசரீரமாகிப்
பெருத்தகோரவித்தைதன்னைப் பிடுங்கிடலடங்குந்தானே.

காரணசரீரந்தன்னைக் களைவதெவ்வாறென்றோதில்
ஆரணம்பொய்சொல்லாதேயதன்பொருளகத்திலுய்த்துப்
பூரணமாகுமென்மேற் புவனங்கடோற்றமென்று
தாரணைவந்ததாகிற் றரித்திடுமவித்தையெங்கே. (௧௭௧)

அப்படியிருக்கச்சித்த மலைதலால்விவகாரத்தில்
எப்படிகூடுமென்னி லென்னைவிட்டொன்றுமில்லை
இப்படிகண்டவெல்லா மென்மயமென்கனாப்போல்
கற்பிதமென்றுதானே காண்கின்றசித்துநானே. (௧௭௨)

சித்துநானிறைந்தோனென்ற திடமறவாதிருந்தால்
எத்தனையெண்ணினாலு மேதுசெய்தாலுமென்ன
நித்திரையுணர்ந்தபின்பு நிற்கின்றகனாவேபோல
அத்தனையும்பொய்தானே யானந்தவடிவுநானே. (௧௭௩)

நானெனவுடலைத்தானே நம்பினேனநேகசன்மம்
ஈனராய்ப்பெரியோராகி யிருந்தவையெலாமிப்போது
கானலில்வெள்ளம்போலக் கண்டுசற்குருவினாலே
நானெனவென்னைத்தானே நம்பியீடேறினேனே. (௧௭௪)

என்னபுண்ணியமோசெய்தே னேதுபாக்கியமோகாணே
நன்னிலங்கனிலெழுந்த நாரணன்கிருபையாலே [ன்
தன்னியனானேனானுத் தரீயத்தைவீசுகின்றேன்
தன்னியனின்னுநானே தாண்டவமாடுகின்றேன். (௧௱௫)

தத்துவஞானம்வந்த சந்தோடவதிசயத்தால்
நித்தமாடுவன்காணென்ற நிலைமுன்னமேயறிந்த
சத்தியமதனாலன்றோ தாண்டவாவென்றழைத்தார்
அத்தனைமகிமையுள்ளோ ரன்னையும்பிதாவுந்தாமே. ()

வந்ததோரிவ்வாநந்த மகிழ்ச்சியாருடன் சொல்வேன்யான்
சிந்தையிலெழுந்துபொங்கிச் செகமெலாநிறைந்துதேங்கி
அந்தமில்லாததாயிற் றப்படிக்குருவேதாந்த
மந்திரமருளுமீசன் மலரடிவணங்கினேனே. (௧௱௭)

வித்தியாநந்தமிந்த விதமெனவிளம்பினோமே
பத்தியாலிந்தநூலைப் பார்த்தநுபவித்தபேர்கள்
நித்தியதருமநிட்டை நிலைதனையறிந்துசீவன்
முத்தியையடைந்திருந்த முனிவரராகுவாரே. (௧௱௮)

ஆரணப்பொருளாம்வித்தியாநந்தம்விளங்கவேதும்
காரணங்குறைவிலாமற் கைவல்யநவநீதத்தைப்
பூரணமாக்கவேண்டிப் பூர்வமாநன்னிலத்தில்
நாரணகுருநமக்கு நவின்றனர்யோகில்வந்தே. (௧௱௯)

## நூல்செய்தவர் சிறப்பு.

அண்ணறன்னருளினாலே யகம்புறமன்றியொன்றாய்
எண்ணமிலக்கியார்த்தத் தின்பொருளதுநானென்ன

நண்ணினசரீரமாதி நாதத்தினுபாதியென்றே
கண்ணதாயனைத்துங்காணக் காட்டினன்றாண்டவேசன்.

## வேறு.

ஆன்றபதமா மூன்றற்கு மதுநீயானு யெனும்பொரு ளிற், சான்றதுரியா தீதமெனுந் தடையற் றிலங்கொண் சைதந்நியம், ஊன்றியுணர்ந்தோர் விகற்பமயக் கொழித் துத்தடையு மூடறுத்துத், தோன்றித்தானே தானவர் துலங்குந்தமக்கே சுவானுபவம். (கஅக)

என்னுமாவாக்கியநான்கு மிசைக்கும் வித்தியானந் தம், சொன்னநாரா யணன்பாதந் தொழுதுதுதித்தோர் துகளற்றோர், இன்னமாணுக்கன் குருவாற் சந்தேகந்தீர்ந் திடுபதத்தே, துன்னிநிறைந்து நின்றோர்க யேமுத்தாகு வரே. (கஅஉ)

## வேறு.

தத்துவவிளக்கத்தாலுஞ் சந்தேகந்தெளிதலாலும்
ஒத்திருள்விடாதமாயா வுள்ளிருளிரியவோங்கும்
சித்ததாமொளிவிளங்கச் செய்துபின்விருத்திபேதப்
புத்தியால்வருமையத்தைப் புரையறத்தெளிவித்தாண்டான்.
ஆண்டதேசிகனுமைய னரணனனந்தன்பாதம்
பூண்டவாரோபத்தான்முன் பொய்ம்மயக்காய்வந்தத்தை
மாண்டநல்லபவாதத்தான் மாய்த்தருளேக்கத்தென்றும்
காண்டிடவைத்தளித்த காரணுபோற்றிபோற்றி. (கஅச)

குலவுசற்குருவின்பாதக்குளிர்புனற்றலைமேற்கொண்டால்
உலகனிற்றீர்த்தமெல்லா முற்றபேறடைவார்போல
நலமையாகுங்கைவல்ய நவநீத நூலைக்கற்றோர்
பலகலைஞான நூல்கள் படித்தஞானிகளாய்வாழ்வார். ( )

சந்தேகந்தெளிதற்படலம் முற்றிற்று.

ஆக படலம் ௨-க்கு திருவிருத்தம் - ௨௬௫.

கைவல்யநவநீதம் முற்றிற்று.

---

சர்வஞ்சின்மயம்.